# வேத பாரதி செய்திகள்


VEDABHARATHI SEITHIGAL Tamil Monthly தமிழ் மாத இதழ்

மலர் : 7 இதழ்: 9 ஜூன் : 2023 ரூ.20/-
Volume: 7 Issue: 9 June : 2023 Rs.20/-




# SHRI MAHA MERU MANDALI TRUST

Reg. No.DIT (E) No.2 (651) 12-13/Sl.No.90/13-14



# அஷ்டோத்ர ஸத சுக்ர வார ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாம பாராயணம்

**40வது பாராயணம் - 12.05.2023 வெள்ளிக்கிழமை**

**அருள்மிகு ஸ்ரீ மரகதாம்பிகை ஸமேத மணிகண்டேஸ்வரர் சிவன் கோவில்,** OMR Road, Padur, Chennai - 603 103.

**41வது பாராயணம் - 19.05.2023 வெள்ளிக்கிழமை**

**அருள்மிகு நந்தீஸ்வரர் திருக்கோவில்,**

ஆதம்பாக்கம், சென்னை - 600 088

**42வது பாராயணம் - 26.05.2023 வெள்ளிக்கிழமை**

**அருள்மிகு ஸ்ரீ முப்பாத்தம்மன் திருக்கோவில்**

தி.நகர், சென்னை - 600 017.

**43வது பாராயணம் - 02.06.2023 வெள்ளிக்கிழமை**

**அருள்மிகு ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி அம்மன்,**

கணபதி சச்சிதானந்த ஆசிரமம், பேபி நகர், வேளச்சேரி, சென்னை - 600 042.

**தொடர்ந்து 108 கோவில்களில் பிரதி வெள்ளிக்கிழமை நடைபெற உள்ள ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாம பாராயண வைபவத்தில் நாமும் பங்கு பெறுவோம்.**

**மேலும் தொடர்புக்கு : 9444060346**

தங்கள் வீடுகளுக்கு அருகில் உள்ள ஆலயங்களில் வெள்ளிக்கிழமைகளில் மண்டலி சார்பாக ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பாராயணம் செய்திட அனுக வேண்டிய எண்.

**9443495950, 9444060346**

# வேதபாரதி செய்திகள்
(ஆன்மீக மாத இதழ்)

மலர்: 7 இதழ்: 9

அச்சிட்டு வெளியிடுபவர்
பதிப்பாளர், ஆசிரியர்




**ஆர்.வெங்கட்ராமன்**
27, F1 அன்னை இந்திரா நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
செல்: 94434 95950



அச்சகம்:
**சபாநாயகம் பிரிண்டர்ஸ்**
39, மில்லர்ஸ் சாலை, கீழ்ப்பாக்கம்,
சென்னை - 600 010.

REGD No : TN/CC(S) / DN / [illegible]
RNI No : 1262168
Title Code : TNTAM/2016/73726
R.Dic.No.1645/2015
VEDABHARATHI SEITHIGAL
(Tamil Monthly Magazine)
Published on : 1-7th (1st Week) Every Month
TN/PMG (CCR) / WPP 605/21-23
Valid from 01.01.2021 to 31.12.2023

புத்தக வடிவமைப்பு :
**ரெம்ஸ் டிஜிட்டல் பிரஸ்**
நெ.17, பாரதி தெரு, இந்திராநகர்,
காமராஜபுரம், சென்னை - 42. போன்: 9025864231

## இந்த புத்தகத்தின் உள்ளே செய்திகள்


| | |
|---|---|
| ஒரு நிமிடம் உங்களோடு... | 5 |
| ஆனி மாத விசேஷங்கள் | 10 |
| ஆட்டைப்படு விளக்கம் | 11 |
| ஸ்ரீமத் பகவத்கீதை | 14 |
| மஹாபெரியவாளின் அற்புத விளக்கங்கள் | 17 |
| சிருங்கேரி மஹா சுவாமிகள் | 18 |
| தர்மத்தின் குரல் | 19 |
| ஆசாரம் | 21 |
| இராமாயணம் தரும் படிப்பினை | 23 |
| [illegible] | 25 |
| பெற்றோர்களே கவனியுங்கள் | 27 |
| சாதனைப்பிறவிகள் | 31 |
| [illegible] ஆற்றல் | 36 |
| [illegible] நிழலில் | 38 |
| அட்ட வீரட்டத் தலங்கள் | 42 |



**சந்தா விவரம்**
ஒரு வருட சந்தா ரூ.200
10 வருட சந்தா ரூ.1500
வங்கி மூலம் புத்தக சந்தா வழங்கிட
**VEDABHARATHI**
City Union Bank, Velachery Branch
A/c No. 510909010005286
IFSC : CIUB0000262



நிர்வாக முகவரி:
எண்.31, சேஷாத்திரிபுரம்
1வது தெரு, [illegible]
வேளச்சேரி, சென்னை - 600 042.
**D. சூர்யநாராயணன்**
Cell : 98841 05302
**R. வெங்கட்ராமன்**
Cell : 94434 95950
Email:vedabharathichennai@gmail.com
Website: www.vedabharathi.org


**காயத்ரீ தேவி**

**வியனுலகனைத்தையும் அமுதென நுகரும்**
**வேத வாழ்வினைக் கைப்பிடித்தோம்.**
மஹாகவி பாரதி

# அறிவோம் வேதம்

இந்தப் பகுதியில் ஒவ்வொரு அறிவோம் ஆழ்ந்து வேதமந்திரமும் அதற்குண்டான பொருளும் வழங்கப்படும்.

## வேதமந்திரம் - 46

**வேதாஹமேதம் புருஷம் மஹாந்தம்**
**ஆதித்ய வர்ணம் தமஸ: பரஸ்தாத்**
**தமேவ விதித்வா அதிம்ருத்யுமேதி**
**நாந்ய: பந்தா வித்யதே அயநாய ||**

**பொருள் :** பெருமைக்குரிய புருஷனை நான் அறிந்து கொண்டேன். அவர் இருளுக்கு அப்பாற்பட்டு அதாவது இருளைப் போக்கக்கூடும் சூரியனைப் போல் பிரகாசிப்பவர். அவரை இந்தப் பிறவியிலேயே அறிந்து மரணத்தைக் கடக்க முடியும். மோக்ஷம் (விடுதலை) பெறுவதற்கு வேறு [illegible] வழியும் கிடையாது.

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

## ஒரு நிமிடம் உங்களோடு!

இந்த பிரபஞ்சத்தில் நடக்கும் ஒவ்வொரு செயலும் கூட்டு முயற்சியில்தான் நடைபெறுகிறது. ஆனால் மனிதன் "எல்லாம் என்னால்தான் நடந்தது" என்று கூறுகிறான். எது செய்தாலும் அதில் எல்லாருடைய பங்கும் உள்ளது என்ற எண்ணம் உண்டாக வேண்டும். பகவான் தந்த வாழ்க்கை என்ற பரிசை, பாக்யத்தை நல்ல விதத்தில் மற்றவர்களுடைய மனம் புண்படாமல் உபயோகிக்க வேண்டும். எல்லோருக்கும் சகோதர மனோபாவம் ஏற்பட வேண்டும். உலகில் யாரும் உயர்ந்தவரும் இல்லை தாழ்ந்தவரும் இல்லை. அவரவர்களுக்கு உள்ள வேலையை அவரவர் செய்தால் போதும்.

ஒரு ஊரில் ஒரு சலவைக்காரன் இருந்தான். அவன் துணிகளைச் சுமக்க ஒரு கழுதையையும், வீட்டுக் காவலுக்கு ஒரு நாயையும் வளர்த்து வந்தான். ஒரு நாள் கழுதைக்கும் நாய்க்கும் ஒரு வாக்குவாதம் ஏற்பட்டது. இரண்டும் எஜமானனுக்கு நான்தான் முக்கியமானவன் என்று கழுதையும், இல்லை நான் தான் உண்மையான விசுவாசி என்று நாயும் சண்டைபோட்டுக்கொண்டன. நாய் கழுதையிடம் "நம்மில் யார் எஜமானனுக்கு உண்மையான ஊழியன் என்பதை நிருபிக்க இன்று ஒரு நாள் இரவு நீ வீட்டைப் பார்த்துக் கொள். நான் நாளை துணிகளை சுமக்கிறேன்" என்றது இதற்கு கழுதையும் ஒப்புக்கொண்டது.

அன்று இரவு வீட்டிற்கு ஒரு திருடன் வந்தான். இதைக் கண்ட கழுதை தன் எஜமானனை எழுப்புவதாக நினைத்து தன்னுடைய குரலில் கத்தியது. இதைக் கேட்ட சலவைக்காரன், கழுதை தன் தூக்கத்தைக் கெடுத்துவிட்டது என்று எழுந்துவந்து கழுதையை

நையப் புடைத்தான். பொழுதுவிடிந்து பார்த்தால் வீட்டில் எல்லாம் திருடு போயிருந்தது. இரவில் திருடன் வந்ததை நாய் உஷார்படுத்தவில்லை என்ற கோபத்தில் நாயையும் நையப்புடைத்துவிட்டான்.

இரண்டும் அதனதன் வேலையைப் பார்த்துக் கொண்டிருந்தால் வீணாக அடி வாங்கியிருக்க வேண்டாம். இது போல்தான் சில மனிதர்களும்.

தொகுப்பு : **டி. சூரியநாராயணன்**

## ஸ்ரீ முனீஸ்வர சாஸ்திரிகளுக்கு வேதபாரதியின் பாராட்டுக்கள்



**ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே**
**செல்லும்வா யெல்லாஞ் செயல்.**
**குறள் 33.**

தாங்கள் ஆற்றிவரும் மகத்தான தெய்வீக காரியங்களுக்கும், அறம் சார்ந்த செயல்களுக்கும் பகவானின் ஆசீர்வாதத்தால் கிடைத்த “டாக்டர் பட்டம்'' கிடைத்தமைக்கு மிகவும் உவகை அடைந்தேன்.

**ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச்**
**சான்றோன் எனக்கேட்ட தாய்.**
**மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை**
**என்னோற்றான் கொல்எனுஞ் சொல்.** குறள் : 69,70

இரண்டு குறள்களுக்கும் பொருத்தமாக வாழ்ந்துவரும் தாங்கள் வாழ்க்கையில் மேன்மேலும் பல புகழ்களைப் பெற்று நீண்ட ஆயுளுடன் வாழ பகவானை பிரார்த்திக்கிறேன். தாங்கள், வேதபாரதிக்குக் கிடைத்த ஒரு பொக்கிஷம்.

அன்புள்ள மாமா
**டி. சூரியநாராயணன்**
வேதபாரதி.

## இறையருளுக்கு இனிய துதிகள்

''கடவுளிடம் நம்முடைய மனதை ஒருமுகப்படுத்தி ஆத்மார்த்தமாக வேண்டினால் இறையருள் பெறலாம்'' என்று நமது இந்து சாஸ்திரங்கள் கூறுகின்றன. கடவுளைத் தாயாகவும், தந்தையாகவும், குழந்தையாகவும், உற்ற நண்பனாகவும் பாவித்து அவரது அழகிய திருக்கோலத்தையும், கருணையையும், வீர தீர பராக்கிரமங்களையும் போற்றி நம் மனக்குறைகளைக்கூறி அருள்புரியும்படி வேண்டுகிறோம். அவற்றின் காரணப் பெயரும் பொருளும் அறிந்து பாடினால் இன்னும் சிறப்பல்லவா? சமஸ்கிருத ஸ்லோகங்களுக்கு சூட்டப்பட்டுள்ள பொதுவான பெயர்களின் பொருளும் விளக்கங்களும், பயன்களும் இங்கே தரப்பட்டுள்ளன.

**1. அஷ்டோத்ரம், சத நாமாவளி :** பொருள் : கடவுளின் 108 திருநாமங்களைக் கூறி மலர்களால் அர்ச்சனை செய்வது. அந்தந்த கடவுளுக்கும் அவருடைய 108 திரு நாமங்களைச் சொல்லி அர்ச்சித்தால் நன்மைகள் கிடைக்கும்.

**2. சஹஸ்ர நாமாவளி :** பொருள் : கடவுள்களின் 1008 திருநாமங்களைக் கொண்ட தொகுப்பு. எல்லா கடவுள்கள் பெயரிலும் சஹஸ்ரநாமம் சொல்லுவதுண்டு. உதாரணம் “விஷ்ணு சஹஸ்ரநாமம்” “லக்ஷ்மி சஹஸ்ரநாமம்” முதலியவை பிரபலமானவை

**3. திரிசதீ நாமாவளி :** தேவியின் 300 திருநாமங்களைக் கொண்ட தொகுப்பு. உதாரணம் “லலிதா திரிசதீ நாமாவளி” “ச்யாமளா திரிசதீ நாமாவளி” மற்றும் பல.

**4. பஞ்ச சதி :** செய்யுள் வடிவிலான ஐந்நூறு துதிகள் கொண்ட தொகுப்பு. உதாரணம் புலவர் காளிதாஸர் ஸ்ரீ காமாக்ஷி பெயரில் பாடிய 500 ஸ்லோகங்களே “மூக பஞ்ச சதி”.

**5. ஸ்துதி :** செய்யுளாகவோ அல்லது உரை நடையாகவோ அமைந்த மேலான பிரார்த்தனைகள். உதாரணம் "மஹாகணபதி ஸ்துதி" "ஆஞ்சநேயர் ஸ்துதி", "மஹாலக்ஷ்மி ஸ்துதி" மற்றும் பல.

**6. ஸ்தோத்திரம் :** உதாரணம் "விஷ்ணு சஹஸ்ரநாம ஸ்தோத்தரம், "ஸ்ரீ லலிதா மற்றும் லக்ஷ்மி சஹஸ்ரநாம ஸ்தோத்ரம்".

**7. அஷ்டகம் :** எட்டுப் பகுதிகள் கொண்ட ஸ்துதி. உதாரணம் "சுப்ரமணிய அஷ்டகம்", அன்னபூரண அஷ்டகம்" "லஷ்மி அஷ்டகம்", ஸ்ரீரங்கநாத அஷ்டகம்" "லிங்காஷ்டகம்" மேலும் பல.

**8. பஞ்சரத்னம் :** செய்யுள் வடிவில் ஐந்து ஸ்துதிகள் கொண்ட தொகுப்பு உதாரணம் "கணேச பஞ்சரத்னம், "தக்ஷிணாமூர்த்தி பஞ்சரத்னம்", "அனுமத் பஞ்சரத்னம்" "மீனாக்ஷி பஞ்சரத்னம்" மற்றும் பல.

**9. புஜங்கம் :** பாம்பு நெளிந்து ஊர்ந்து செல்வது போன்ற நடையில் எழுதப்பட்ட செய்யுள்கள். உதாரணம் "கணேச புஜங்கம்" "சுப்ரமணிய புஜங்கம்" "பவானி புஜங்கம்" "சாரதா புஜங்கம்" மற்றும் பல.

**10. லஹரி :** அலைகள் அடிப்பது போன்ற நடையில் அமைந்த செய்யுள்கள் உதாரணம் அம்பாளின் குணங்களையும் அழகையும் வர்ணிக்கும் "ஸௌந்தர்ய லஹரி" "ஆனந்த லஹரி", "சிவானந்த லஹரி" மேலும் பல.

**11. தண்டகம் :** ஒரு வகை அளவு கட்டுப்பாடு கொண்ட உரைநடை ஸ்துதி. உதாரணம் "ஸ்யாமளா தண்டகம்" "கருட தண்டகம்" மேலும் பல.

**12. கவசம் :** நினைப்பவரை காக்கும் மந்திரம். எந்த கடவுளின் கவசத்தை பக்தியுடன் சொல்லுகிறோமோ அந்த கடவுள் நம்மைக் காப்பார். இது செய்யுள் நடையிலோ அல்லது உரை நடையிலோ இருக்கும்.

*உதாரணம் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை சொல்லக்கூடிய "கந்தசஷ்டி கவசம்" "கந்தகுரு கவசம்" "ஷண்முக கவசம்" கருட புராண நாராயண கவசம்" மற்றும் பல.*

**13. ஸுப்ரபாதம் :** *கடவுளை பள்ளி எழுச்சி செய்ய விடியற்காலையில் பாடும் ஸ்துதி. உதாரணம் "ஸ்ரீவெங்கடேச ஸுப்ரபாதம்" 'ஸ்ரீகுருவாயூர் ஸுப்ரபாதம்" "ஸ்ரீ ராகவேந்திர ஸுப்ரபாதம்" மேலும் பல.*

**14. காயத்ரி :** *காயத்ரி என்றால் ஜபிப்பவர்களைக் காப்பாற்றுகிறது என்று பொருள். உதாரணம் "நவகிரஹ காயத்ரி", விஷ்ணு காயத்ரி", "ஹனுமன் காயத்ரி" "துர்கா காயத்ரி" மற்றும் பல.*

*ஸ்தோத்திரங்களும், ஸ்துதிகளும், பாடல்களும் நமது முன்னோர்களால் நமக்குக் கிடைத்த வரப்பிரசாதமாகும். இவற்றில் நம்மால் இயன்ற அளவு துதித்து இறைவனின் அருளைப் பெறுவோமாக.*

தொகுப்பு : **டி. சூரியநாராயணன்**

## வாழ்த்துகிறோம்

*23.04.2023 ஞாயிற்றுக்கிழமை*

*வேதபாரதி யுவஸ்ரீ உறுப்பினர்*

**சௌ.பி.மஹாலட்சுமி - சிர.கார்த்திக்**

*திருமணம் ஸ்ரீரங்கத்தில் வேதோக்தமாக நடைபெற்றது. திருச்சி நிர்வாகி ஸ்ரீ சந்திரசேகர் கலந்து கொண்டு வாழ்த்தினார்கள்.*

*27.04.2023 வியாழக்கிழமை சென்னையில் நடைபெற்ற திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் வேதபாரதி செயலாளர் ஸ்ரீ வெங்கட்ராமன் குடும்பத்தோடு கலந்து கொண்டு வாழ்த்தினார்கள்.*

## சோபக்ருது வருஷம் - ஆனி மாத விசேஷங்கள்
### (ஜுன் 14.06.2023 முதல் ஜுலை 15.07.2023 வரை)

| | | | |
|---|---|---|---|
| 14.06.2023 | வை 31 | புதன் | கூர்மஜயந்தி |
| 16.06.2023 | ஆனி 1 | வெள்ளி | க்ருத்திகை, ப்ரதோஷம் |
| 17.06.2023 | ஆனி 2 | சனி | அமாவாஸை |
| 22.06.2023 | ஆனி 7 | வியாழன் | சதுர்த்தி |
| 24.06.2023 | ஆனி 9 | சனி | ஷஷ்டி |
| 25.06.2023 | ஆனி 10 | ஞாயிறு | ஆனித் திருமஞ்சனம் |
| 29.06.2023 | ஆனி 14 | வியாழன் | ஏகாதசி |
| 30.06.2023 | ஆனி 15 | வெள்ளி | சாதுர்மாஸ்ய விரதம் |
| 01.07.2023 | ஆனி 16 | சனி | சனி ப்ரதோஷம், அனுஷம் |
| 03.07.2023 | ஆனி 18 | திங்கள் | பௌர்ணமி |
| 06.07.2023 | ஆனி 21 | வியாழன் | சங்கடஹர சதுர்த்தி |
| 08.07.2023 | ஆனி 23 | சனி | ஷஷ்டி |
| 13.07.2023 | ஆனி 28 | வியாழன் | ஏகாதசி, க்ருத்திகை |
| 15.07.2023 | ஆனி 30 | சனி | சனி ப்ரதோஷம் |

## 17.06.2023 சனிக்கிழமை - அமாவாஸை

ஸ்ரீ சோபக்கிருது நாம ஸம்வத்ஸரே உத்தராயணே க்ரிஷ்மருதௌ, மிதுன மாஸே, க்ருஷ்ணபக்ஷே, அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ வாஸர: வாஸரஸ்து ஸ்திர வாஸர யுக்தாயாம் ரோஹிணி நக்ஷத்ர யுக்தாயாம், விஷ்ணு யோக விஷ்ணுகரண, ஏவம்குண ஸகல விசேஷண விஸிஷ்டாயாம், அஸ்யாம், அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ.

Owned, Published and Printed by **R. VENKATARAMAN,** Printed at **SABANAYAGAM PRINTERS,** 39,Millers Road, Kilpauk, Chennai - 600010 and Published at 27, F1, Annai Indira Nagar, Velachery, Chennai - 600042. Editor : **R. VENKATARAMAN, 9443495950**

# அட்டைப்பட விளக்கம்

## "கூர்ம ஜயந்தி"

### கூர்ம அவதாரம்

*பகவான் மஹாவிஷ்ணுவின் அவதாரங்கள் மொத்தம் பத்து. அதாவது மச்ச, கூர்ம, வராஹ, நரசிம்ம, வாமன, பரசுராம, பலராம, ராம, கிருஷ்ண, கல்கி இவற்றில் கல்கி அவதாரம் இன்னும் நிகழவில்லை. அவர் எடுத்துள்ள அவதாரங்கள் பரிணாம வளர்ச்சியையும், சகல ஜீவராசிகளின் முக்கியத்துவத்தையும் எடுத்துக் கூறுகின்றன. பகவான் அவதாரங்கள் எடுத்ததன் நோக்கமே அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்டவே அவதாரங்களில் இரண்டாவது அவதாரம் "கூர்ம அவதாரம்". இந்த அவதாரத்தில் மட்டும் பகவான் தீயவர்களை அழிக்காமல் பலருக்கும் நன்மையைக் கொடுக்கவும், பல பொருட்களை தோற்றுவித்து நற்பலனை கொடுத்தார். இந்த அவதாரம் கிருத யுகத்தில் நடைபெற்றது. கூர்ம அவதாரம் நிகழ்ந்த நாளே "கூர்ம ஜெயந்தி" என்று கொண்டாடப்படுகிறது. ஆனி மாத கிருஷ்ணபட்சத்தில், அதாவது தேய்பிறை துவாதசி திதியில் திருமால் கூர்ம அவதாரம் எடுத்ததாக புராணங்கள் கூறுகின்றன.*

*பகவான் மஹாவிஷ்ணு ஏன் இந்த ஆமை (கூர்ம) ரூபம் எடுத்தார்?*

*அசுரர்களும், தேவர்களும் மந்தர மலையை மத்தாகவும், வாசுகி பாம்பை கயிறாகவும் கொண்டு பாற்கடலை கடைந்தபோது பாரம் தாங்காமல் மந்தர மலை கடலில் மூழ்கியது. தேவேந்திரனும், தேவர்களும் பகவான் திருமாலை சரண் அடைந்தனர். பக்தர்களைக் காக்கும் திருவுளம் கொண்ட பகவான் மிகப்பெரிய ஆமையாக (கூர்மமாக) வடிவம் எடுத்து கடலில் மூழ்கி*

மலையைத் தாங்கிக் கொண்டு மேலே கொண்டுவந்தார். மலை நேராக நிமிர்ந்து வாசுகியால் கடையப்பட்டது. அதிலிருந்து அமிர்தம் மட்டுமல்லாமல் காமதேனு, கற்பக விருக்ஷம், கௌஸ்துப மாலை போன்ற பலவும் வந்து கடைசியாக தேவலோக சஞ்சீவியான அமிர்தத்தை ஏந்தியவாறு தன்வந்திரி மூர்த்தியும் தோன்றினார். இவ்வாறு தேவர்களும், பூவுலகும் நன்மை பெற செல்வங்களை அளித்தார். கூர்ம மூர்த்தியான பகவான் திருமால்.

ஆமை என்றாலே அதை அபசகுனமாக சிலர் நினைப்பார்கள். ஆனால் ஆமை என்பது புலன்களை அடக்க காட்டப்படும் ஒரு உதாரணம். ஆமைக்கு ஏதாவது ஆபத்துவரும் போது அது தன் தலையையும் நான்கு கால்களையும் தன் ஓட்டுக்குள் ஒடுக்கிக்கொள்ளும். இதைத்தான் வள்ளுவரும் கூறுகிறார்.

ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்பு உடைத்து.

(குறள் எண் : 126)

<u>பொருள் :</u> ஒரு பிறப்பில் ஆமைபோல் ஐம்பொறிகளையும் அடக்கியாள வல்லவனானால் அது அவனுக்குப் பல பிறப்பிலும் காப்பாகும் சிறப்பு உடையது.

இதை உணர்த்தும் விதமாகத்தான் கோயில்களில் ஆமையின் உருவம் வைக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் 79 கோயில்களில் ஆமை உருவம் உள்ளது. கேரளாவில் எல்லா கோயில்களிலும் இதைக் காணலாம்.

**கூர்ம ஜயந்தி : 14.06.2023 புதன்கிழமை**

பக்தர்களுக்காக பாரம் சுமந்து பாதுகாத்த கூர்ம பகவானை ‘‘கூர்ம ஜயந்தி’’ அன்று ஸ்ரீமஹா

*விஷ்ணுவின் ஸ்தோத்திரங்கள் அல்லது கீழ் உள்ள கூர்ம காயத்ரி மந்திரத்தை பலமுறை ஜபித்து கூர்ம பகவானை வணங்கி வளம் பெறுவோம்.*

*ஓம் தராதராய வித்மஹே*
*பாசஹஸ்தாய தீமஹி*
*தன்னோ கூர்ம ப்ரசோதயாத்*

தொகுப்பு : **டி. சூரியநாராயணன்**

---

**உ**

**ஹரி:ஓம்**

**வேதபாரதி மற்றும் ஸ்ரீ அண்ணாமலையார் பக்தர்கள் குழு, திருநெல்வேலி**
**கோடி காயத்ரீ ஜப யக்ஞம் 2023**
**ஸ்ரீ மஹாருத்ரம்**

*அன்புடையீர்,*

*எல்லாம் வல்ல பரமேஸ்வரரின் திருவருளால்* **பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகளின்** *ஆசியுடன்* **பூஜ்யஸ்ரீ வித்யா சங்கர ஸ்வாமிகளின்** *வழிகாட்டுதலில் பேரில் கடந்த 6 மாத காலமாக ஜப யக்ஞ உறுப்பினர்கள் ஸந்த்யா வந்தனம் தவிர ஸ்ரீ காயத்ரீ ஜபம் செய்து கோடி ஆவர்த்திகள் பூர்த்தி ஆகி உள்ளது. திருப்பூர், புதுவை, ஊரப்பாக்கம், திருச்சி, தருமபுரி, கோவிந்தபுரம் ஆகிய ஊர்களில் ஹோமங்களுடன் பூர்த்தியாகி உள்ளது.*

*அதன் தொடர்ச்சியாக வரும்* **23.06.2023 வெள்ளி முதல் 25.06.2023 ஞாயிறுவரை அருள்மிகு ஸ்ரீ அழியாபதீஸ்வரர் திருக்கோவிலில் ஸ்ரீமஹாருத்ரம் மற்றும்** *ஸ்ரீ காயத்ரீ ஜப யக்ஞம் செய்வதாக ஏற்பாடு ஆகி உள்ளது. அனைவரும் வருக! வருக!*

**இடம்:**
**அருள்மிகு அழியாபதீஸ்வரர் திருக்கோவில், கருப்பூந்துரை**
**திருநெல்வேலி**

**இப்படிக்கு**
**வேதபாரதி கோடி காயத்ரீ ஜப யக்ஞ கமிட்டி**
**ஸ்ரீ அண்ணமலையார் பக்தர்கள் குழு**

**தொடர்புக்கு : 86701 22565**

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய,
ஓம் நமோ நாராயணாய.

# ஸ்ரீமத் பகவத்கீதை

D. சூரியநாராயணன் பகுதி - 50

## அத்தியாயம் – 2

## "ஸாங்க்ய யோகம்" (மாஹாத்மியம்)

இந்த இரண்டாவது அத்தியாயத்தில் முக்கியமாக "மனதைக் கட்டுப்படுத்துவது எளிதான செயல் அல்ல மிகவும் கடினமானது" என்றும், "பயிற்சியின் மூலம் பல்வேறு கோணங்களிலிருந்து மனதைக் கட்டுப்படுத்தும் விதம் பற்றியும் விளக்கம் அளிக்கிறது.

மேலும் பிரம்மஞானத்தை அடைந்தவனின் சரீரம் வீழ்ந்தவுடன் பரப்ரம்மத்தில் இரண்டறக் கலந்துவிடுகிறான் என்று **"ஸ்திதப்ரஞன்"** அடையும் உயர்ந்த நிலை பற்றி பகவானின் விளக்கத்துடன் இந்த இரண்டாவது அத்தியாயம் முடிகிறது.

இந்த இரண்டாவது அத்தியாயம் முழுவதும் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் ஆத்ம ஞானத்தைப் பற்றியே போதிப்பதால் இதற்கு **"ஸாங்க்ய யோகம்"** என்றதலைப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஸ்ரீமத் பகவத்கீதையில் இந்த இரண்டாவது அத்தியாயம் மிகவும் முக்கியமானதாகும். கீதையின் முழு சாரமுமே இந்த இரண்டாவது அத்தியாயத்தில்தான் இருக்கிறது. இனி வரும் அத்தியாயங்கள் அனைத்துமே இந்த இரண்டாவது அத்தியாயத்தின் விளக்கமாகத்தான் இருக்கும். அவ்வளவு முக்கியம் வாய்ந்தது இந்த இரண்டாவது அத்தியாயம்.

ஒரு அந்தணர் தினமும் ஹோமம், பூஜை, பாராயணம், விருந்தோம்பல், வேதாத்தியயனம் முதலியவற்றைச் செய்துவந்தார். ஆனால் மனதிற்கு சாந்தி கிடைக்காமல் கஷ்டப்பட்டார். ஒரு நாள் ஒரு ரிஷி முனிவரை சந்தித்து தன் கஷ்டத்தைக் கூறினார். அந்த ரிஷி அந்த அந்தணரிடம் நீங்கள் கீதையின் இரண்டாவது அத்தியாயத்தை பாராயணம் செய்தால் மனசாந்தி கிடைக்கும்'' என்று கூறிவிட்டு நடந்த ஒரு சம்பவத்தையும் அவருக்கு கூறினார்.

"ஒரு காலத்தில் சில முனிவர்கள் ஒன்று சேர்ந்து தினமும் ஒரு கல் மண்டபத்தின் மீது அமர்ந்து கீதையின் இரண்டாவது அத்தியாயத்தை படித்துவந்தனர். ஒரு சமயம் திடீரென அவர்கள் காலமடைந்தனர். ஆனால் அந்த கல்மண்டபத்தின் சுற்று வட்டாரத்துக்குள் யார் வந்தாலும், அவர்களுக்கு எவ்வளவு கெட்ட குணம் இருந்தாலும் அவர்கள் மாறி சாந்தமாகி நல்லவர்களாக மாறிவிடுவார்கள். ஒரு நாள் ஒரு புலி அந்த கல் மண்டபத்திற்கு அருகில் வந்தது. அதே நேரம் சில ஆடுகளும் அங்கே வந்தன. ஆனால் அந்த புலியானது அந்த ஆடுகளை இம்சிக்காமல், அடித்து புசிக்காமல் தன் வழியே நடந்தது'' என்று கூறினார்.

அதன்பின் அந்த அந்தணரும் கீதையின் இரண்டாவது அத்தியாயத்தை படிக்கத் துவங்கினார்.

பரமாத்மாவே தன் குரு என்பதை உணர்ந்து அவரிடம் அர்ஜுனன் ஆத்ம உபதேசம் பெறுவதுதான் இரண்டாம் அத்தியாயம்.

அடுத்த மாதம் முதல் ஸ்ரீபகவத் கீதையின் மூன்றாவது அத்தியாயம் ஆரம்பம்.

கீதை தொடரும்...

**வாழ்த்துகிறோம்**

*வேதபாரதி புத்தகக்குழு உறுப்பினர்*
*ஸ்ரீ S.க்ருஷ்ணமூர்த்தி அவர்களின் சகோதரர்*

**S.ஹரிஹரன் - H.ஹேமலதா**

*தம்பதியர் சஷ்டியப்தபூர்த்தி விழா* **01.06.2023** *அன்று* **பம்மல் சாய் ரக்ஷா ஹாலில்** *சிறப்பாக நடைபெற்றது. தம்பதியர் ஸதாபிஷேகம், கனகாபிஷேகம் செய்து கொண்டு பரமக்ஷேமமாய் வாழ ப்ரார்த்திக்கிறோம்.*

---

*வேதபாரதியின் ஆரம்பம் முதல் அருந்தொண்டாற்றி வரும் ஸ்ரீ சௌபாக்யா ரமேஷ் - சௌந்தரி அவர்களின் புதல்வி* **சௌ. R. வித்யாலக்ஷ்மி (எ) நிவேதிதா - சிர. K.சுப்ரமணியம் (எ) அபிஷேக்**

*திருமணம்* **28.06.2023 அன்று ஜமீன்பல்லாவரம், ப்ரீத்தி ஹாலில்** *நடைபெற உள்ளது. தம்பதியர் சீரோடும், சிறப்போடும் வாழ வேதபாரதி மனதார ப்ரார்த்திக்கிறோம்.*

---

*வேதபாரதியின் நங்கநல்லூர் பொறுப்பாளர்*
*ஸ்ரீ எம்.வி. சுப்ரமணியம் - ஸ்ரீமதி. அவையாம்பாள்*
*தம்பதியரின் கனிஷ்ட குமாரத்தி*

**சௌ.S.அபிநயா - சிர.P.R.நாராயணன்**

*இவர்களின் திருமணம்* **28.06.2023, நங்கநல்லூர், இராமமந்திரம் திருமண மண்டபத்தில்** *நடைபெற உள்ளது. மணமக்கள் சீரோடும் சிறப்போடும் வாழ ப்ரார்த்திக்கிறோம்.*

---


*வேதபாரதி உறுப்பினர்களின் 10வது மற்றும் 12வது படித்த மாணவர்கள் அதிக மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சிபெற்றுள்ளார்கள். அவர்கள் மதிப்பெண் அடிப்படையில் நமது பத்திரிக்கையில் போட உள்ளோம்.*

*குறிப்பு : உயர்கல்வி படிக்கும் அந்தண பெண் குழந்தைகளுக்கு ஹாஸ்டல் வசதி செய்து கொடுக்கப்படும். +1, +2 படிக்கும் அந்தண சிறுவர்களுக்கு வேதத்துடன் கூடிய கல்வி வழங்கப்படும்.*

*தொடர்புக்கு :* **9443495950**

# மஹா பெரியவாளின் அற்புத விளக்கங்கள்

## வர்ண தர்மம்



வர்ண தர்மம் என்பது ஒன்று : ஆச்ரம தர்மம் என்பது இன்னொன்று. தனி மநுஷ்யன் இன்னின்ன பிராயத்தில் இப்படியிப்படி இருக்க வேண்டும் என்பது ஆசிரம தர்மம். முதலில், சின்ன வயசில் பிரம்மச்சாரியாக இருந்து குருகுலத்தில் வித்தியாப்பியாசம் பண்ண வேண்டும். இரண்டாவது யௌவனத்தில் கல்யாணம் பண்ணிக் கொண்டு குடித்தனம் நடத்திப் பிரஜாவிருத்தி செய்ய வேண்டும். மூன்றாவதாக, வயசான பின் வீடு வாசலை விட்டு வனத்துக்குப் போய் வாழ வேண்டும். லோக வாழ்க்கையில் ரொம்பவும் பட்டுக் கொள்ளாமல் வைதிக கர்மாக்களை மட்டும் செய்து கொண்டிருக்க வேண்டும். அப்புறம் நாலாவது ஆசிரமத்தில் இந்த வேத கர்மாக்களைக்கூட விட்டுவிட்டு, லௌகீக சம்பந்தங்களை அடியோடு கத்தரித்துவிட்டு, சந்நியாசியாகிப் பரமாத்மாவிடமே மனசைச் செலுத்த வேண்டும் என்று விதிப்பது ஆசிரம தர்மம். இந்த நாலு ஆசிரமங்களுக்கு பிரம்மசர்யம், கார்ஹஸ்த்யம் (க்ருஹஸ்த தர்மம்), வானப்ரஸ்தம், ஸந்நியாசம் என்று பெயர். இது தனி மனிதனுக்கான தர்மம்.

முற்றும்.

## சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகள் அருளியவை

### திருப்தி




தனக்குத் குழந்தை பாக்கியத்தைத் தந்தருளுமாறு ஒருவன் இறைவனிடம் பிரார்த்தித்துக் கொண்டான். கூடிய சீக்கிரமே அவன் ஓர் ஆண் குழந்தைக்குத் தந்தையானான். அக்குழந்தை தாயிடம் பால் குடிக்க மறுத்தது. இதைக் கண்டு மனம் வருந்திய அப்பக்தன், மீண்டும் இறைவனிடம் சென்று, “நீ எனக்கு ஒரு குழந்தையைக் கொடுத்தாய். ஆனால், அதற்கு பால் குடிக்கத் தெரியவில்லை. அது எங்ஙனம் உயிர் வாழப் போகிறது என்பதை நினைத்தால், எனக்கு மிகவும் கவலையாக உள்ளது. என் கஷ்டத்தைத் தீர்க்க நீதான் ஏதாவது செய்ய வேண்டும்’’ என்று கேட்டுக் கொண்டான். பக்தனின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட இறைவன், “அப்படியா? நாளை முதல் அது பால் குடிக்கும்; கவலைப்படாதே’’ என்று கூறியருளினார். குழந்தை பால் குடிக்க ஆரம்பித்ததும், அவனுடைய கஷ்டம் தீர்ந்தது. ஆனால், வருடங்கள் செல்லச் செல்ல அதனுடைய சேட்டைகளும், தாங்க முடியாத அளவிற்கு அதிகமாகிக் கொண்டே வந்தன.

மறுபடியும் பக்தன் இறைவனிடம் சென்றான். குழந்தையை எப்படியாவது திருத்தி, சமர்த்தாக நடந்து கொள்ளச் செய்ய வேண்டுமென்று பிரார்த்தித்தான்.

தொடரும்...

# தர்மத்தின் குரல்
# பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள்
## அத்தியாயம் 3 : வேதங்கள்



*3-7 சென்றமாத தொடர்ச்சி..*

இத்தகைய ஒரு கலப்புச் சூழ்நிலையில் தோன்றுகிற வாசகங்களைக் கேட்டவுடனேயே, இவை முரண்பாடுகள் கொண்டவை என்ற அவசர முடிவுக்கு வருவது, முதிர்ச்சியைக் காட்டாது. சரியான முறை என்னவென்றால், தொடக்கம் முதல் இறுதி வரையிலானவற்றையும் அவற்றின் சந்தர்ப்பங்களையும் ஒப்பிட்டு, அதன்பிறகு அவற்றைப் புரிந்துகொள்வதேயாகும். உதாரணமாக, மேலே சொன்ன எடுத்துக்காட்டில், அந்த பெண் ஒரு சின்னக்குழந்தையை வடை சாப்பிடவேண்டாம் என்று சொல்லி பாலைப்பருக வேண்டும் என்று வற்புறுத்துவதையும் வளர்ந்த பையனை வடை சாப்பிடச் சொல்வதையும் யூகிக்கலாம். படிப்பில் ஆர்வம் மிக்க ஒரு பையனைச் சிறிது நேரம் விளையாடுமாறு அவனுடைய அம்மா சொல்லுவாள்; அவ்வாறில்லாத பையனை “உட்கார்ந்து படி” எனச்சொல்லுவாள் இவ்வாறு சந்தர்ப்பங்களுக்கு ஏற்பப் பொருள் கொண்டால், அவற்றில் முரண்பாடுகள் இரா. அதைப் போலவே, வேதங்களிலும், சரீரத்தின் மீது பற்று இருக்கிறவர்களுக்கு கர்மாக்கள் வற்புறுத்தப் பட்டுள்ளன.

தொடரும்...

*நமது வேதபாரதி இதழில் தொடர்ந்து வெளிவரும் ஸ்ரீமத்பாகவதம், ஸ்ரீ ஆதிசங்கரர், அறுபத்தி மூன்று நாயன்மார்கள், ஔவையார், தெரிந்து கொள்வோம் ஆகிய தொடர்கள் வரும் மாதங்களில் வெளியாகும்.*

*ஆசிரியர்.*

## வாழ்த்துக்கள்

**14.05.2023 ஞாயிற்றுக்கிழமை** *திருப்பூர் பொறுப்பாளர் ஸ்ரீ P.A. சுப்ரமணியம் அவர்களின்* **தௌஹித்ரன் ஸ்ரீ வேங்கட சுப்ரமணிய சர்மாவிற்கு உபநயனம் திருச்சி ஸ்ரீரங்கத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்றது.** *வேதபாரதி பொறுப்பாளர் ஸ்ரீ சந்திரசேகர் அவர்கள் கலந்து கொண்டு வடுவை வாழ்த்தினார்கள்.*

---

## சதாபிஷேகம்

*வேதபாரதியின் புத்தகக்குழு உறுப்பினர்*
*ஸ்ரீ கே.என். பத்மநாபன் அவர்களின் தாய் தந்தையர்*
**ஸ்ரீ கே.பி. நாராயண ஐயர் – ஸ்ரீமதி. மீனாட்சி** *தம்பதியருக்கு ஆயிரம் பிறைகண்ட சதாபிஷேக பெருவிழா* **சென்னை மடிப்பாக்கத்தில் 09.06.2023 அன்று நடைபெற உள்ளது.** *மாமி – மாமா சதாபிஷேகம், கனகாபிஷேகம் செய்து கொண்டு பரமக்ஷேமமாக வாழ ப்ரார்த்திக்கிறோம்.*

---

## பூஜ்ய ஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகளின் 3-வது ஆண்டு ஆராதனை

*பூஜ்ய ஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகளின் ஆராதனையை முன்னிட்டு மந்தைவெளி ஸ்ரீ சங்கர குருகுலத்தில் வேதபாராயணம் நடைபெற உள்ளது. அனைவரும் கலந்து கொண்டு ஸ்வாமிகளின் ப்ரசாதம் பெற்றுச் செல்ல அன்புடன் அழைக்கின்றோம்.*

**நாள் : 14.07.2023 வெள்ளிக்கிழமை**
**நேரம் : காலை 9.00 மணி முதல் 11.30 மணி வரை**

# "ஆசான்"

**மதுரை முரளி**

"நல்லூர்" போர்டுடன் பச்சை நிற சிற்றுந்து செம்மண் சாலையில் பயணிக்க, இடையிடையே பறந்து வந்த மண் புழுதி பஸ் கண்ணாடியில் படர்ந்து அதன் நிறத்தை பழுப்பு நிறமாய் மாற்றியது.

மாலை நேர சூரியன் சாய்வு கோணத்தில் சற்றும் சூடு குறையாத அக்னியை கக்க, தொப்பலாய் சட்டையில் நனைந்தும், மனமகிழ்ச்சியாய் பயணப்பட்டான் பிரகாஷ்.

பிரகாஷ் ஒரு தகவல் துறை பட்டதாரி அடிப்படையில், அதன் மேல் பல சிறப்புப் பட்டங்கள் பெற்று, சென்னையில் அயல்நாட்டு கம்பெனியின் தலைமை பொறுப்பில் நிர்வாக அதிகாரி.

ஆறு இலக்க சம்பளம் வயது... கிட்டத்தட்ட அரை சதம் நோக்கி நெருங்கிவிட்டான்.

கடந்த ஒரு வாரமாய் ஒரே மன அழுத்தம் அவனுக்குள். ஓடி, ஓடி பணத்துக்காக பகல் இரவு பாராது உழைத்து கால் நூற்றாண்டு காலம் கடத்தியவன் மனம்.. தளர்ந்து போக,

மனைவி இரு மகள்களிடம், தான் பத்துநாள் ஓய்வில் செல்வதாய் கூறிவிட்டு தான் பிறந்து, வளர்ந்த கிராமத்தை நோக்கி இப்போது,

"என்னங்க பத்து நாள் லீவு போட்டு, ஏதாவது மேல்நாட்டு சுற்றுலா போனா சரி. நாம எப்போதும் அப்படித்தானே! போயும், போயும் உங்க கிராமத்துக்கு போறேங்கறீங்க? அங்கே என்ன பொழுதுபோக்கு இருக்கு?" மனைவி மாலா அங்கலாய்க்க

"மாலா, இதுவரை நானும் உன்னைய மாதிரி தான் நினைச்சேன். ஆனா, திடீர்னு ஒரு வாரமா மனசு பாரமா இருக்கு. என் சொந்த பூமியிலே, கால் வைச்சு..

கும்பிட மனசு துடிக்குது. நான் படிச்ச பள்ளிக்கூடம்.. என்னோட ஒரே வாத்தியார் சுவாமிநாதன் பற்றிய நினைவுகள் என் மனசுல அதான் நான் கிளம்பறேன்''

"படக்'' என முடிவெடுத்தவன் இதோ பயணத்தில்.

காற்றிலே இலேசாய் மண் வாசனை. ஈரம் கலந்த மணம் ரம்மியமாய்.

ஜன்னல் வழியாய் பார்த்தவன் பார்வையில்.. பசுமை போர்த்திய பூமி. பாசம் விளையும் பூமி.

விழியோரத்தில் நீர் துளிர்த்து கன்னத்தில் வடிய, கைக்குட்டையை எடுத்து துடைத்து கொண்டான் பிரகாஷ்.

"நல்லூர்'' கிராமம் நுழைவு அறிவிப்பு கண்ணில் பட, தோள் பேக்கை மாட்டிக்கொண்டு இறங்க தயாரானான்.

கூட இறங்கிய ஆறு பேர் இவனது தோற்றத்தைப் பார்த்து தங்களுக்குள் கிசுகிசுத்தனர்.

ஊர்பாதை.. அதே பழைய நிலையில்.

வெள்ளாடுகள் மந்தையாய்.. இவனுக்கு முன்னால் போக, வேப்பங்குச்சியை கிரிக்கெட் பேட்டாய் சுழற்றியபடி, ஒரு சிறு பையன் ஏதோ ஒரு பாட்டை முணுமுணுக்க..

"தம்பி, உங்க பேரு என்ன? என்ன படிக்கிறீங்க?'' சற்று வேகமாய் நெருங்கி வினவினான் பிரகாஷ்.

தலையில் கட்டியிருந்த முண்டாசை வேகமாய் அவிழ்த்த பையன்,

"சார்.. நீங்க? என் பெயர் முருகன். ஆறாம் வகுப்பு படிக்கிறேன்"

மரியாதை குரலிலும் செயலிலும் தெரிந்தது.

தொடரும்...

## இராமாயணம் தரும் படிப்பினை

6. போர்காலங்கள் தவிர மற்ற நேரங்களில் யாரையும் கொல்லக்கூடாது குறிப்பாக சிறுவர்கள், வயோதிகர்கள், நாட்டை ஆளும் அரசன், பெண்கள் ஆகியோரை எந்த நேரத்திலும் கொல்லக்கூடாது. அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள். அந்தத் தவறு செய்தால் பாவம் வரும். அந்தப் பாவம் என்னை வந்து அடையட்டும் என்றான் பரதன்.

7. சுற்றத்தினருக்கு நல்ல உணவு கொடுக்காமல் அவர்கள் பார்க்க நான் மட்டும் நல்ல அறுசுவை உண்டியை உண்ணுதல் பாவம். இராமன் வனம் செல்ல நான் காரணமென்றால் அந்தப் பாவம் என்னை வந்து அடையட்டும்.

8. மது, மாமிசம், அரக்கு, இரும்பு ஆகியவைகளை விற்றுத் தன் குடும்பத்தினரைக் காப்பது மிகப்பெரிய பாவம். அதைச் செய்தவன் எந்த நிலைக்கு ஆட்படுகிறானே அதை நானும் அனுபவிப்பேன் என்கிறான் பரதன்.

9. அதிகாலை, மதியம், சாயங்கால வேளைகளில் தூங்குவது பாவம்.

10. கன்று ஈன்று 10 நாட்களுக்குள் அதன் பாலை உபயோகப்படுத்துவது கூடாது. அது பாவச்செயல்.

11. நம்பிக்கை துரோகம் செய்தல், பிறர் மனைவியை நாடுதல் பாவம்.

12. நீர்நிலைகளை அசுத்தப்படுத்தக்கூடாது. பொய்யான வாக்குறுதிகளை யாருக்கும் கொடுக்கக்கூடாது.

13. வாதவிவாதம் நடக்கும் சமயம் ஒருவர் தவறு செய்கிறார் என்று தெரிந்தும் பேசாமல் இருத்தல் பாவம்.

*ஸ்ரீ இராமனுக்குத் தீங்கு செய்பவர்களுக்கு வாழ்வில் நல்லது நடப்பது துர்லபம். அவருக்கு தீங்கு செய்ய நினைப்பது அதர்மம். அதர்மச் செயல்கள் செய்தால் என்ன துன்பங்கள் நேருமோ அவை எல்லாம் இராமர் காட்டிற்குச் செல்லக் காரணமாக இருந்த எனக்கு வந்து சேரட்டும். 'தர்மோ ரக்ஷதி ரக்ஷிதஹ" தர்மத்தை காக்கும் இராமருடைய பணிக்கு நான் கடைசி வரை உறுதுணையாக இருப்பேன் இது சத்தியம் என்று கூறினான் பரதன்.*

*பலதரப்பட்ட பாவச் செயல்களைப் பட்டியல் இட்ட பரதன் தன்னை மறந்த நிலையில் மூர்ச்சையாகிவிட்டான்.*

**- காந்தாமணி நாராயணன்**

**கோடை வெயிலை சமாளிக்க நீர், மோர் பந்தல் அமைத்த தன்னார்வலர்கள்...**

*கிரீன் வேளச்சேரி மற்றும் வேதபாரதி இணைந்து வேளச்சேரியில் பெருங்குடி இரயில் நிலையம் அருகில் நீர், மோர் பந்தல் அமைத்து சித்ரா பௌர்ணமி முதல் தொடர்ந்து பொதுமக்களுக்கு தாகம் தீர்த்து வருகின்றனர்.*

## வாழ்த்துக்கள்

வேதபாரதியின் நங்கநல்லூர் உறுப்பினர்
ஸ்ரீ வெங்கடாச்சலம் - ஸ்ரீமதி காந்திமதி புதல்வர்
**சிர.ராமகிருஷ்ணன் (எ) விக்னேஷ் - சௌ.அபிராமி (எ) அபி** திருமணம் **01.06.2023 அன்று மதுரை எஸ்.எம்.கே. திருமண மண்டபத்தில்** நடைபெறுகிறது. மணமக்கள் சீரோடும், சிறப்போடும் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

வேதபாரதி.

## இளையோர் சூடார்

பொன்னியின் செல்வன் திரைப்படத்தில் ஆங்காங்கே பல இடங்களில் தமிழ் இலக்கிய பாடல்களை பின்னணியில் மிக அழகாக உபயோகபடுத்தியுள்ளார்கள். உதாரணத்திற்கு நந்தினியின் இளம் வயதில் அவள் பாடும் திருப்பாவை "ஆழி மழை கண்ணா" முதல் பாகத்தில் அருள்மொழி வர்மன் வானதியின் ஓலையை வாசிக்கும் பொழுது ஒலிக்கும் "தோடுடைய செவியன்" செங்குருதி சேயோனே பாடலில் அமைந்திருக்கும் திருப்புகழைப் போன்றசந்தம். இந்த வரிசையில் நான் மிகவும் ரசித்தது இரண்டாம் பாகத்தில் ஊமை ராணி மந்தாகினி உயிர்விடும் நேரத்தில் ஒலிக்கும் "இளையோர் சூடார்" இந்த பாடல்

*இளையோர் சூடார் : வளையோர் கொய்யார்*
*நல் யாழ் மருப்பின் மெல்ல வாங்கி*
*பாணன் சூடான்; பாடினி அணியாள்*
*ஆண்மை தோன்றஆடவர்க் கடந்த*
*வல் வேல் சாத்தன் மாய்ந்த பின்றை*
*முல்லையும் பூத்தியோ, ஒல்லையூர் நாட்டே*

ஒல்லையூர் கிழான் மகன் பெருஞ்சாத்தன் என்பவரின் மறைவிற்கு குடவாயில் கீரத்தனார் எனும் புலவர் முல்லையை நோக்கி பாடும்படியாக அமைந்த புறநானூற்று பாடல் இது. (குறிப்பு : கீரத்தனார் பாடிய ஒரே ஒரு பாடல் தான் ஆவண படுத்தப்பட்டுள்ளது)

"முல்லையே! தன்னுடைய வீரம் வெளிப்படுமாறு பகைவர்களின் வீரர்களைக் கொன்ற, வலிய வேலையுடைய சாத்தன் இறந்த பிறகு, ஒல்லையூர் நாட்டில் பூத்தாயோ? இனி, இளைய ஆடவர்கள் உன்

பூக்களைச் சூடிக்கொள்ள மாட்டார்கள்; வளையல் அணிந்த மகளிரும் உன் பூக்களைப் பறிக்க மாட்டார்கள்; நல்ல யாழின் தண்டால் மெதுவாக வளைத்துப் பறித்து உன் பூக்களைப் பாணனும் சூடமாட்டான்; பாடினியும் சூடமாட்டாள்" என்பது இந்த பாடலுடைய பொருள்.

இயற்கையைப் பார்த்து கவிஞர் கேட்கும் இக்கேள்வி சாத்தன் பால் அவன் ஊர் மக்களும் அவன் புரந்த பாணரும் பாடினியரும் கவிஞரும் கொண்டிருந்த பேரன்பையும் அவன் ஊராரிடம் பெற்றிருந்த புகழையும் ஆறு வரிகளில் எடுத்துக்காட்டும் இச்சிறு பாடல் ஒரு பெருங்காவியம் செய்யும் வேலையைச் செய்துவிடுகிறது.

இந்த பாடலை தேர்ந்தெடுத்து, மந்தாகினி மறைவிற்கு அதற்கேற்றபடி ஒரு ஓலத்தின் ராக அமைப்பில் வடிவமைத்து கொடுத்தருப்பது மிக அருமை. தமிழ் இலக்கிய சுரங்கத்திற்குள் இருக்கும் முத்துக்களை இவ்வாறாக இந்தத் தலைமுறைக்கு அளித்திருப்பதில் மாபெரும் மகிழ்ச்சி.

**வெ. சிவசங்கரி**


99940 89133 99940 89140



**SRI SASTHA CATERING**



*We are Supplying Meals,*
*Tiffin & Marriage Sear*
*Variation in Order*



28, Senthuran Colony, 2nd Street, Muvarasempet, Madipakkam, Chennai - 91

# பெற்றோர்களே! கவனியுங்கள்!

## (குழந்தை வளர்ப்பு)

காந்தலக்ஷ்மி சந்திரமௌலி பாகம் - 3 பகுதி - 30

ஆசிரியர்களின் பங்கு, பணி என்பது என்ன? வாருங்கள் பெற்றோர்களே, சேர்ந்து புரிந்து கொண்டு, உணரலாம்.

ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் 5ம் தேதி "ஆசிரியர் தினம்'' என்று ஏதோ ஒப்புக்கு கொண்டாடுகிறோம். இதில் பெற்றோர்கள் பங்கு பெறுவதில்லை.

மொத்தமாக குழந்தைகள் பள்ளிக்கு சென்றபள்ளியின் சட்டதிட்டப்படி கொண்டாட்டம்'' என்று நடைபெறுகிறது. கல்லூரிகளில் பணி புரியும் பேராசியர்களுக்கு இக்கொண்டாட்டம் உள்ளதா? பெற்றோர்கள் கவலைப்படுவதில்லை.

மிருகங்கள் போன்று வாழ்ந்த மனிதகுலம் ஆதிமனிதனாக மெதுவாக மாறியதன் காரணம் இயற்கை எனும் ஆசிரியர். ஆயிரமாயிரம் ஆண்டுகளாக மாறிக்கொண்டே இருந்த மனிதகுலம் ரிஷிகள், முனிவர்கள், சித்தபுருஷர்கள், இறைவனின் அவதாரங்கள் இவர்களின் மூலம் கற்றுக்கொண்டே இருந்ததினால் உயர்ந்து கொண்டே போயிற்று.

ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு தொடர்ந்து அறிவாற்றல் ஒரு நூல் போன்று வருகிறதென்றால் அதற்கு காரணம் ஆசிரியர்கள் இவர்கள் உங்கள் தாய், தந்தையராக இருக்கலாம். ஏதோ ஒரு புத்தகமாக இருக்கலாம். ஆனால் இந்த அறிவாற்றலின் ஓட்டம் இன்றும் தொடர்கிறது.

நம் தேசத்தில் அறிவாற்றலை அளிக்க எத்தனை ஞானிகள், முனிவர்கள், சித்தபுருஷர்கள், ஆச்சாரியர்கள். இன்றும் ஓயாது உழைக்கும் ஆசிரியர்கள் வரை கணக்கேயில்லாமல் எத்தனை பேர் நமக்கு கற்றுத் தந்து கொண்டேயிருக்கிறார்கள்.

சரித்திரம், மொழி, கணக்கு, விஞ்ஞானம், பௌதீகம் என்று கூறிக் கொண்டே போகலாம் இன்றளவும் ஆசிரியர்கள் நம் மனநலத்தை பேணுகின்றனர், காரணம் அவர்கள் அளிக்கும் கல்வி அவர்கள் அறிவுசார்ந்த விஷயங்களின் வற்றாத ஊற்று. அதிலிருந்து இச்சமுதாயத்திற்காக அளித்துக் கொண்டேயிருக்கிறார்கள்.

பிறக்கும் பொழுது வெறும் பூஜ்யமாக இருக்கும் அறிவு பிறகு எத்தனை விஷயங்களை கற்றுத் தருகின்றது. மாதா, பிதா மட்டுமே கற்றுத் தந்தால் போதுமென்றால் சனாதன தர்மத்தில் பிறகு குரு, தெய்வம் என்று ஏன் வைத்தார்கள்.

மாதா, பிதாவின் பங்கிற்கு பிறகு குருவின் பங்கு மிக அதிகம். அவர் தான் ஒரு மனிதனின் வாழ்க்கையில் குறிப்பாக பிரம்மச்சரிய காலகட்டங்களில் பெரும் பங்கு வகிக்கின்றார்.

மரத்தடியில் குருவும், மாணவர்களும் இருப்பது மாறி, கட்டிடங்கள் கட்டி, பள்ளிகள் என்றும் வளர்ச்சியடைந்தன. இன்று பிரம்மாண்ட கட்டிடங்கள். மிக ஆழமான படிப்புகள் என்று கல்வி உலகம் மிகவும் விரிவடைந்துள்ளது.

ஆனால் அன்றிலிருந்து, இன்று வரை மாறாதது எது? ஆசிரியர்களும், அவர்கள் பணியும் தான். கட்டிடங்களும், சௌகரியங்களும் ஏன் கணினியும் கூட கல்வியை அளிக்கவல்லதென்றால் ஆசிரியர்கள் எனும் இனமே வேண்டாமே!

பெற்றோர்களே, யோசியுங்கள் நீங்கள்

தாயாகவும், தந்தையாகவும் மிகச் சிறப்பான கடமைகளை ஆற்றுவீர்கள். ஆனால் உங்களால் முழுமையான, அறிவாற்றல் நிறைந்த கல்வியை கற்றுத்தர இயலுமா? அது சாத்தியமா?

பிறகு எதன் அடிப்படையில் பள்ளி, கல்லூரி, ஆசிரியர்கள், பேராசியர்களை மட்டமாக கருதுகிறீர்கள்? இச்சமுதாயத்தின் தூண்கள் என்று பலவற்றைகூறுகிறோம். ஆனால் இச்சமுதாயத்தின் அஸ்திவாரமே ஆசிரியர்கள் தானே? அஸ்திவாரம் இல்லாமல் தூண்கள் நிற்க முடியுமா? ஒரு "காதலர் தினத்திற்கு" அளிக்கப்படும் உலகளாவிய மரியாதை. ஒரு ஆசிரியர் தினத்திற்கு பெற்றோர்கள் ஏன் அளிப்பதில்லை? பள்ளிகளோடு பெற்றோர்களும் இணைந்து ஆசிரியர்களுக்கு மரியாதை மட்டுமல்ல, மகிழ்ச்சியையும் அளிக்க வேண்டிய கடமை இல்லையா?

உங்கள் குழந்தைகளின் ஆசிரியர்களை மட்டம் தட்டுவது, மஸ்கா போடுவது. அலட்சியம் செய்வது, எடுத்தெறிந்து பேசுவது போன்றவிஷயங்களை நீங்கள் செய்யாமல் இருப்பது தான் உங்கள் குழந்தைகளுக்கும், கல்விக்கும், ஏன் அதன் தலைவியான "வாக்தேவி"க்கும் அளிக்கும் முழுமையான நன்றிக்கடன் மற்றும் மரியாதை.

**"உலகம் தழீஇய தொட்பம் மலர்தலும்**
**கூம்பலும் இல்ல தறிவு".**

**(குறள் – 425, அதிகாரம் – 43)**

"உலகத்திலுள்ள உயர்ந்தவரை நட்பாக்கி கொள்வது சிறந்த அறிவு. முன்னே மகிழ்ந்து விரிதலும் பின்னே வருந்தி குவிதலும் இல்லாதது அறிவு" என்கிறார் வள்ளுவர்.

குருவான ஆசிரியரை தவிர யார் உங்கள் உற்ற, உயர்ந்த நண்பனாக இருக்கக்கூடும்?

தொடரும்...


Rs.1000 inclusive of tax
Wopper
COMBO OFFER
This pack contains:
Liquid Detergent 1 L - 1 No
Floor Cleaner 500 ml - 2 Nos
Toilet Cleaner 500 ml - 2 Nos
Fabric Conditioner 500 ml - 1 No
Vessel Wash 500 ml - 1 No
Multipurpose Cleaner 100 ml - 1 No
Hand Wash 100 ml - 1 No
Hand Rub 100 ml - 1 No
FREE
Contact
9952972436 / 7824807801
Shri Meera Labs Pvt Ltd
Our Chemistry ... Your Success
WOPPER
Fluid Chemistry

# சாதனைப் பறவைகள்

டாக்டர்.ஷ்யாமா ஸ்வாமிநாதன்

## கௌரிமா — 3



ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் விருப்பபடி தன் வாழ்க்கையின் திசையை மாற்றிக்கொண்டு, இந்த தேசத்தின் பெண்களின் உயர்வுக்காக தன்னை முழுவதுமாக அர்ப்பணித்துக் கொண்டார் கௌரி மா. பாரத தேசத்துப் பெண்களின் வாழ்க்கை வலிகளை அவர் நன்றாகவே அறிந்திருந்தார். அவர்களின் உயர்வுக்கு அடிப்படைத்தேவை கல்வியறிவு என்பதைப் புரிந்து கொண்டார். கல்வியறிவற்ற பெண்களின் வாழ்க்கை அர்த்தமற்றதாகவும் பயனற்றதாகவும் ஆகிவிடும் என்பதில் உறுதியாக இருந்தார். ஆனால் எங்கிருந்து, எப்படி, யாருடன் தொடங்குவது என்று சற்றே குழம்பியிருந்தார். இருந்தாலும் இறைவனடி சேர்ந்துவிட்ட ஸ்ரீ ராமகிருஷ்ணர், தெய்வமாக நின்று தனக்கு வழிகாட்டுவார் என்பதில் மிகுந்த நம்பிக்கையோடு இருந்தார். அந்த நம்பிக்கை வீண்போகவில்லை 1895-ம் ஆண்டு, பாரக்பூர் எனும் சிற்றூரில், கங்கை நதிக்கரையில் ஸ்ரீ சாரதேஸ்வரி ஆஸ்ரமத்தை அமைத்தார். ஆதரவற்றபெண்கள், கணவனை இழந்தவர்கள் என்று பல பெண்களுக்கு இந்த ஆஸ்ரமம் வரப்பிரசாதமாக அமைந்தது. பெண்கல்வி, சுய தொழில் என்று துல்லியமாகத்

திட்டமிட்டு, பெண்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதற்கு தன்னால் இயன்றஅளவுபாடுபட்டார் கௌரிமா, அவருடைய எதிர்கால திட்டங்கள் வியப்பூட்டுபவையாக இருந்தன.

அமெரிக்காவிலிருந்து திரும்பி வந்த, சுவாமி விவேகானந்தர், கௌரிமாவின் இந்த ஆஸ்ரமத்திற்கு விஜயம் செய்தார். அதன் செயல்பாடுகள், கௌரிமாவின் எதிர்கால திட்டங்கள் அனைத்தும் கேட்டறிந்து மிகவும் சந்தோஷப்பட்டார். “இந்த ஆஸ்ரமத்திலிருந்து கார்கி, மைத்ரேயி, அருந்ததி போன்றபெண்கள் உருவாகவேண்டும். அப்படி பெண்களை உருவாக்கும் சக்தி உங்களிடம் இருக்கிறது. நான் உங்களை உலக மேடைகளில் அறிமுகப்படுத்தி, இந்த தேசம் எத்தகைய பெண்மணிகளை உருவாக்கும் ஆற்றல் கொண்டது என்பதை விளக்குகிறேன்” என்று பாராட்டினார். 1911-ம் ஆண்டு இந்த ஆஸ்ரமம் கல்கத்தாவுக்கு மாற்றப்பட்டது. ஸ்ரீ சாரதா அன்னையார் அடிக்கடி இங்கு விஜயம் செய்து பெண்களை ஊக்குவித்தார். 1924-ம் ஆண்டு இந்த ஆஸ்ரமத்திற்கென சொந்தமான கட்டிடம் உருவானது. இதிலும் ஒரு புதுமையை செய்தார் கௌரிமா.

இங்கே சேவை புரியும் அனைத்து சன்யாசினிகளும் சிவப்புவண்ணக்கரை கொண்ட புடவைகளை அணிந்து கொண்டதுடன் வெண்சங்கு வளையல்களையும் (வங்காள சுமங்கலிப் பெண்கள் அணிவது போல்) அணியும் படி செய்தார். ஏனென்றால் சாரதா அன்னை பெண் சன்யாசினிகள் சுமங்கலிகள் போல இருக்கவே விரும்பினார். அதனால் அவர்களை சாளகிராம நாராயணருக்கோ அல்லது ஜகன்னாதருக்கோ தெய்வீகத் திருமணம் செய்துவித்து

நித்ய சுமங்கலிகள் என்று உணரவைத்தார்.

கௌரிமா பெண்களின் கல்வியில் தன் கவனத்தைத் தீவிரப்படுத்திக் கொண்டார். பெண்களுக்கு கல்வி என்பது இந்த தேசத்தின் கண்களைப் போன்றது என்பதில் அதிக நம்பிக்கை கொண்டிருந்தார். ஆஸ்ரமத்தில் கல்வி கற்பிக்க வரும் ஆசிரியர்களின் தேர்வில் அதி கவனம் செலுத்தினார். பெண்களுக்கு ஏட்டுக் கல்வியுடன் பலவகையான தொழிற்கல்விகளிலும் பயிற்சி அளித்தார். சுவாமி விவேகானந்தர் இவரின் பணிகளை நேரில் பார்வையிட்டு மிகவும் மனமகிழ்ந்து பாராட்டிச் சென்றார்.

கௌரிமா, வாழ்க்கையின் ஒரு கட்டத்தில் தான் மட்டுமே இந்த ஆஸ்ரமத்தின் பொறுப்புக்களை சுமப்பது அதன் எதிர்காலத்திற்கு உதவாது என்று முடிவுசெய்து, மிகச்சிறந்த சமூக அக்கறைமிகுந்த, பெண்களைத் தேர்ந்தெடுக்க ஆரம்பித்தார். அவர்கள் ஆரம்பத்தில் ப்ரும்மசாரிணிகளாகவும், பின்னர் சன்யாசினிகளாகவும் இருக்கக் கூடிய மனப்பான்மையைப் பெற்ற பெண்மணிகளைத் தேர்ந்தெடுத்து அற்புதமான நிர்வாகக் குழு அமைத்தார். தான் இல்லாத சூழலிலும் இந்த ஆஸ்ரமம் எந்தவிதமான நிர்வாக சிக்கல்கள் இன்றி நடைபெற அத்தனை முயற்சிகளையும் செய்தார். இந்தக் குழுவினர் “அன்னையர் குழு'' என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் அனைவர்க்கும் ஆன்மீக விழிப்புணர்வும் கட்டாயம் இருக்க வேண்டும் என்று அதற்கும் பயிற்சியளித்தார்.

1938-ம் வருடம் சிவராத்திரி தினத்தன்று, திடீரென்று கௌரிமா, 1882-ம் ஆண்டு, அதாவது

*ஐம்பத்தி ஆறு ஆண்டுகளுக்கு முன்பாக, ஸ்ரீ ராமகிருஷ்ணர் என்னிடம் நான் என் கையிலிருக்கும் நூலை இழுக்காதவரை நீ என்னிடம் வர இயலாது என்றார். இப்போது அதற்கான நேரம் வந்துவிட்டது" என்றார். இதனைத் தொடர்ந்து சில நாட்கள் அமைதியாகவே கழிந்தது. அவரின் இறுதி தினமும் வந்தேவிட்டது. இரவு நேரம் 8.15 ஆக இருந்தது. கௌரிமாவை சுற்றி பலர் இருந்தனர். அவர் அறையில் யாரும் எதுவும் பேசவேண்டாம் என்று ஜாடை செய்தார் கௌரிமா. சில மணித்துகள்கள் அமைதியில் கழிந்தன. அனைவரும் பார்த்துக் கொண்டிருக்க மஹா சமாதி நிலையை அடைந்தார் கௌரிமா. அவர் முகம் புன்னகைத்தபடி இருந்தது. அவரின் ஆன்மா ஸ்ரீ ராமகிருஷ்ணரின் பாத கமலங்களைச் சென்றடைந்தது என்று சொல்லவும் வேண்டுமா என்ன!*

*சாதனைப் பறவை தொடரும்...*

**ஸ்ரீ கோகுல கிருஷ்ணா கோசாலை**

**ஸ்ரீ கிருஷ்ணாமிருதம் பப்ளிக் சாரிடபள் ட்ரஸ்ட்**


**(80 G Available)**

**756 பசுக்கள் பராமரிப்பு செய்யும் ஸ்தாபனம்**

**1. கோ பூஜை செய்ய 2. கோ தானம் செய்ய**

**3. பசு பராமரிப்பு செய்ய**

**4. பிதுர்கள் திருப்தி அடைய – (மஹாளய பட்ச காலத்தில்)**



பசு பாதுகாப்பு செய்வது கோடிபுண்ணியம்

தொடர்பு : **ஸ்ரீ நடராஜன்**

ஊத்துக்கோட்டை, திருவள்ளூர் - 602 023

**8940224744 / 9363111799**

உ

# திருமண பொருத்தம் இலவசம்

(அனைத்து சமூகத்தினருக்கும்)

வாட்ஸ்அப் மூலம் மட்டும்



**பையன்கள் பெண்கள் ஜாதக நகல்களை வாட்ஸ் அப்பில் அனுப்புதல் வேண்டும்.**

Brahmin Kalyanam.com
An Auspicious Beginning ...
EXCLUSIVE PORTAL FOR BRAHMINS

BK MATRIMONY.com
An Auspicious Beginning ...

## தேதியூர். V.J. ராமன்

ஆத்மார்த்த ஜோதிடர்

**9003195599**
**9445230940**

# அறிவோம் ஆழ்மனதின் அளப்பறியா ஆற்றல்

**திருச்சி கணேசன்**

உலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனிடத்தும் ஏதோ ஒரு திறமை ஒளிந்திருக்கிறது. ஆனால் நம்மில் பலரும் அதனை அறிந்து கொள்வதுமில்லை! புரிந்துகொள்வதுமில்லை! அப்படியே ஒரு சிலர் அதனை அடையாளம் கண்டு புரிந்து கொண்டாலும் அதனை சரியான தருணத்தில் தனக்குச் சாதகமான விதத்தில் உபயோகிப்பதில்லை. உலகில் உள்ள பெண்கள் மற்றும் ஆண்களில் ஒரு சிலரே எல்லா நேரத்திலும், எல்லா வேலைகளிலும், எந்த சந்தர்ப்ப சூழ்நிலைகளிலும் வெற்றி பெறுகிறார்கள். இவர்களுக்கு மட்டும் கடவுள் எப்போதும் துணை புரிவதாக நாம் நினைத்து வருத்தப்படுவதுண்டு. ஆனால் உண்மை என்னவென்றால், இந்த ஒரு சிலர் தங்களது ஆழ்மனதின் அளப்பறியா ஆற்றலை உணர்ந்து அதை முழுமையாகப் புரிந்து கொண்டு உபயோகித்து பல தொடர் வெற்றிகளை அடைகின்றனர். வாழ்வில் நாமனைவருமே எப்போதும் வெற்றிக்கனியையே சுவைக்க விருப்பப்படுகிறோம். வெற்றி பெறுவதற்கான வழி முறைகளை சரியான விதத்தில் தெரிந்து கொண்டு அதன்படி நடப்போமெனில் நமக்கும் தொடர் வெற்றிகள் நிச்சயம். இனி நாம் வெற்றி பெறுவதற்கான வழிமுறைகளை இங்கே காண்போம்.

**நம்மை நாமே சுயமதிப்பீடு செய்தல்:(Self Swot Analysis)**

ஒட்டு மொத்த குடும்பமும் சேர்ந்து ஒரு பெண்ணை வீட்டு வேலை மற்றும் சமையல் வேலை மட்டுமே செய்யத் தகுதியுள்ளவள். அல்லது ஒரு பையன் மாடு மேய்க்கத்தான் தகுதி பெற்றவன் என்று

ஒதுக்கி உதாசீனப்படுத்தியிருந்தாலும் அந்தப் பெண் அல்லது பையனின் உள்ளேயும் ஏதோ ஒரு சிறப்பான திறமை / பலம் (Strength) நிச்சயம் இருக்கும். எனவே நாம் ஒவ்வொருவரும் நம் வாழ்வில் சிறப்பான செயல்களைச் செய்து வெற்றி பெறுவதற்கு நம்மை நாமே சுயமதிப்பீடு செய்து பார்க்க வேண்டியது அவசியம். நம்மிடம் உள்ள பலம் என்ன நம்முடைய பலவீனம் (Weakness) என்ன என்பதை ஆற அமர யோசித்துப் பட்டியலிட்டு எழுத வேண்டும். நம் போன்ற சாதாரணமானவர்களுக்கு பலம் குறைவாகவும் பலவீனம் அதிகமாகவும் பட்டியலில் தெரியும். சாதனையாளர்கள் மற்றும் வெற்றியாளர்களுக்கு பலம் அதிகமாகவும் பலவீனம் குறைவாகவும் இருக்கும். நாம் அதிக முயற்சிகள் எடுத்து பலவீனத்தை பலமாகவும் பலத்தை பன்மடங்கு பலமாகவும் மாற்ற வேண்டும். இவ்வாறு செய்தோமேயாயின் நாம் எந்த சூழ்நிலையிலும் தோல்விகளை வெற்றிகளாக்கி பெற்ற வெற்றிகளை தொடர்ந்து தக்க வைத்துக் கொள்ள முடியும்.

அடுத்து, நம்மில் பலர் சந்தர்ப்பம் (Opportunity) வாழ்வில் ஒரு முறைதான் கதவைத் தட்டும் அப்போது எழுந்து கதவைத் திறந்து ஏற்றுக் கொள்ளலாம் என்று சோம்பிக் காத்திருப்போம். அவ்வாறு இருந்தால் நம் வாழ்வே வீணாகி விடும். ஏன் என்றால் சிலருக்கு சந்தர்ப்பம் கதவைத் தட்டவே தட்டாது அல்லது அது தட்டும் போது எழுந்திருந்து கதவைத் திறக்கக் கூட முடியாத அளவு தள்ளாமை வந்து விடலாம். அதற்குப் பதில் சந்தர்ப்பத்தை நாமே உருவாக்கினோம் என்றால் வாழ்வில் பல வெற்றிகளை நம்மால் அடைய முடியும்.

தொடரும்...

## தருவின் நிழலில்

### இலுப்பை – பாசியா லோங்கிபோலியா – (Bassia Longifolia)

*தமிழகத்தோடு ஒன்றிவிட்ட பல மரங்களில் இலுப்பையும் ஒன்று. குறிப்பாக திருக்கோவில்களுடன் பிணைக்கப்பட்டது இது. வெப்பமண்டல மரமான இது சப்போட்டா தாவரத்தின் குடும்பத்தைச் சார்ந்தது. இலைகளும் அதனை ஒட்டியே இருக்கும்.*

*தமிழகத்தில் கோவில்களை அமைத்து அரசர்கள், பகவானின் நைவேத்யத்திற்கும், அர்ச்சகர் உள்ளிட்ட பணியாளர்களின் உணவிற்கும் நஞ்சை நிலங்களையும், ஸ்வாமிகளின் திருமேனிக்கு எண்ணெய் காப்பு செய்ய நல்லெண்ணெய் தேவைக்காக புஞ்சை நிலங்களையும் மான்யமாக எழுதி வைத்தனர். அதன்படியே திருக்கோவில்களில் தீபம் ஏற்றுவதற்காக இலுப்பை எண்ணெய் பெறும் பொருட்டு இலுப்பை தோப்புகளை ஏரிக்கரைகளை ஒட்டி பெரிய அளவில் வளர்த்து வைத்தனர்.*

*இலுப்பை மரங்கள் தமிழ் இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன. "வௌவால்கள் கூட்டம் இலுப்பைப் பூக்களை விரும்பி உண்ணும்" என்றசெய்தியை 279வது பாடலில் "நற்றிணை" விளிக்கிறது.*

*இம்மரத்தின் இலைகள் வெயிற்காலத்தின் தொடக்கத்தில் கொழுந்துவிடத் தொடங்கும்போது, மரமெல்லாம் இளந்தளிராக "செப்புத் தகடு" போல சிவந்து சூரியனின் ஒளியில் மின்னும் என்று போற்றுகிறது அகநானூற்றின் 107 மற்றும் 351வது பாடல்கள்.*

*மேலும், அகநானூற்றின் பெரும்பாலான பாடல்களிலும் (பாடல்கள் 95, 215, 247, 321, 331) புறநானூற்றின் 384வது பாடலிலும் இப்படி கூறுகின்றன.*

*கரடிகள் கூட்டம் கூட்டமாக ஒரு மரத்தை நோக்கி செல்கின்றன. குட்டி ஈன்ற தாய் கரடிகூட தனது கூட்டத்துடன் அம்மரத்தை நோக்கி பயணப்படுகிறது. மரத்தின் கீழே கொட்டிக்கிடக்கின்றபூக்களை தின்றுவிட்டு இன்னும் சுவையான பூக்களை நாடி மரத்தின் மீதேறி சுவை மிகுந்த பூக்களை உண்டு கிளைகளில் படுத்துக்கிடக்கின்றன.*

*ஆனால், இன்றைக்கு மனிதனின் சுயநல எண்ணங்களினால் கரடிகளின் உணவு பற்றியோ வௌவால்களின் தேவைகள் பற்றியோ சிந்தனையற்று இம்மரங்கள் பெருமளவில் அழிக்கப்பட்டுவிட்டன.*

*பெரும்பாலான திருக்கோவில்களின் திருத்தேர்கள் இம்மரத்தினால் செய்யப்பட்டவையாகும். வருடத்திற்கு ஒருமுறைமட்டுமே ஸ்வாமி உலா வந்தபிறகு வெயில் மழை என அலைந்து பருவ நிலையில் திறந்த வெளியில் நிற்கும் திருத்தேர் சேதம் அடையாமலிருக்கும் வகையில் உற்றுத்தன்மை கொண்டது இலுப்பை.*

*இலுப்பை... இருப்பை மாகாணம், மண்ணப்படிக்கரை, திருச்செங்கோடு, திருவனந்தபுரம் ஆகிய திருக்கோவில்களில் ஸ்தல விருட்சமாக போற்றப்படுகிறது.*

*கேதார கௌரி மரகத லிங்கத்தை பூஜித்து ஈசனின் பாகத்தை பெற்றதாக வரலாறு கூறுகிறது. தன் பாகத்தில்*

ஒன்றைகொடுத்த இறைவன் பாகம்பிரியாள் அர்த்தநாரீஸ்வரராக திருச்செங்கோடு திருத்தலத்தில் அருள்பாலிக்கிறார். சுவாமியின் திருவடியில் குளிர்ந்த நீர் சுரக்கும் இத்தலம் அமைந்திருக்கும் மலை செந்நிறமலை, திருக்கொடிமாடச் செங்குன்றம் என்றும் அழைக்கப்படுகிறது. இத்தல தீர்த்தம் தேவதீர்த்தமாகும். இது விறண்மிண்ட நாயினார் அவதாரத் தலமாகும்.

அம்மையப்ப தோற்றத்தில் காட்சிதரும் இத்தலத்தைப்பற்றி தேவாரம், திருவாசகம், பெரியபுராணம், திருப்புகழ், கந்தர் அநுபூதி, கந்தர் அலங்காரம் ஆகிய தெய்வீக நூல்களில் பாடப்பெற்றுள்ளன. தேவாரத் தலங்களில் 208வது திருத்தலமாகும். இக்கோவில் தல விருட்சம் இலுப்பை மரம்.

இலுப்பை மரத்தின் பூ இனிப்புச்சுவை உடையது. கிராமங்களில் “ஆலை இல்லாத ஊருக்கு இலுப்பை பூ” சர்க்கரை’’ என ஒரு சொல்வடை உண்டு. இதன் பூவிலிருந்து சர்க்கரை தயாரித்து பயன்படுத்தியுள்ளனர். இந்த சர்க்கரை அதிக மருத்துவ குணம் கொண்டது. இம்மரத்தின் அனைத்து பாகங்களும் மருத்துவ குணம் கொண்டது என்றாலும் விதையினுள் உள்ள பருப்பை அரைத்து தடவிவர வீக்கங்களும் வலிகளும் குறையும் இலுப்பை பழம் மலச்சிக்கலை போக்கும் திறனுடையது.

இலுப்பை கொட்டையை பொடிசெய்து சாம்பிராணி, குங்கிலியம் ஆகியவற்றுடன் கலந்து தூபம் போட்டு வந்தால் தீய சக்திகள் அண்டாது. வீட்டினுள்ள எதிர்மறைசக்திகள் வெளியேறி இல்லம் அமைதி பெறும்.

**ஆதிரையன்.**

# AURO MIRA MEDI AIDS

*House of Home Healthcare Products*

- ❖ Breast Pumps
- ❖ Blood Glucose Meters
- ❖ BP Meters
- ❖ Alpha Beds
- ❖ Adult Diapers
- ❖ Under Pads
- ❖ Wheel Chairs
- ❖ Physio Products
- ❖ Home Sleep Study
- ❖ Oxygen Concentrator
- ❖ CPAP / Bi Pap
- ❖ Pulse Oxymeters
- ❖ Nebuliser
- ❖ Morning Walker
- ❖ Weighing Scale
- ❖ Air Purifier




**முதியோர்களை சிறப்பாக பராமரிக்க தேவையான மருத்துவ உபகரணங்கள் எங்களிடம் சலுகைவிலையில் கிடைக்கும்.**

New No.36, Old No.32, Sriram Nagar Main Road,
Near I.I.T. Taramani, Chennai - 600 113.
**9382159199 | auromiramediaids@gmail.com**
**www.auromiramediaids.in**

# அட்ட வீரட்டத் தலங்கள்

(செஞ்சொல்லரசு. மீ.சீனிவாசன், எம்.ஏ.எம்.எட்., பரமக்குடி)

## திருக்கோவிலூர் வீரட்டம்

திருவண்ணாமலையிலிருந்து 35 கி.மீ. தொலைவில் உள்ளது இத்தலம். இவ்வூர் கீழூர், மேலூர் என்னும் இருபிரிவுகளையுடையது. இக்கோவில் கீழூரில் உள்ளது. மக்கள் வழக்கில் திருக்கோயிலூர் என அழைக்கப்படுகிறது.

தென் பெண்ணையாற்றின் தென்கரையில் திகழும் இவ்வூர் பழங்காலத்தில் மலாடு என்னும் மலையமான் நாட்டின் தலைநகரமாயிருந்தது. மலாடர் கோமான் மலையமான் திருமுடிக்காரி மிகச் சிறந்தமன்னன்.

இதனை அகநானூற்றின் தொடர்களால் அறியலாம். மெய்பொருள் நாயனார் அரசு புரிந்ததலம். இராச ராச சோழன் பிறந்த ஊர். இவருடைய தமக்கை குந்தவை நாச்சியார் சுவாமிக்குப் பொன் வழங்கியதோடு, திருவிளக்குகள் ஏற்றிட 2000 கழஞ்சு பொன்னும் அளித்துள்ளார். கபிலர் பாரிமகளிரைத் திருமுடிக்காரிக்கு மணம் முடித்து, வடக்கிருந்து உயிர்விட்ட தலம் இது.

ஸ்ரீமத் ஞானியார் சுவாமி மடாலயம், குகை நமச்சிவாயர் சமாதி, ஞானாநந்தகிரி சுவாமிகள் தபோவனம், ஸ்ரீ ரகோத்தமசுவாமிகளின் பிருந்தாவனம் முதலியவையும் இங்குள்ளன.

ஒரு சமயம் திருக்கயிலையில் இறைவனின் கண்களை உமையம்மை தனது திருக்கரத்தால் பொத்திட, உலகம் இருண்டது. அதனால் உயிர்கள் வருந்தின. அதனால் உமையம்மை தனது கரங்களை விடுத்து அருகே நின்றாள்.

அப்போது இருள்படலம் இறைவனின் ஆணையில் திரண்டு ஓர் உருக்கொண்டது. தயித்தியன் எனும் பெயர் பெற்று, இருள் வடிவால் அந்தகன் என்னும் மற்றொரு பெயரும் பெற்று கடுந்தவம் புரிந்தான். அதனால் இறைகாட்சி கண்டு இருதிணை உயிராலும் எக்காலத்தும் அழியா வரம் வேண்டிட இறைவனும் அவ்வாறே அருளினான்.

ஆணவம் கொண்ட அந்தகன் உலகோரைத் துன்புறுத்தினான். தேவர்களுடன் திருமாலும் சிவபிரானை வேண்டிட, இறைவன் ருத்திர ரூபம் கொண்டு, தனது சூலாயுதத்தின் நுனியில் அவனைக் கோர்த்து தன்னடியின் கீழ் இருத்தினான். தன் செயல் பொறுக்க வேண்டிய அந்தகனுக்குச் சிவஞானம் தந்து சிவகணங்களில் ஒருவனாக்கி சிவபிரான் லிங்கத்தில் மறைந்தான். அந்தகாசுரனை அழித்த வீரத்திலகமிது.

கோயில் மேற்குப் பார்த்த சந்நிதி. முன்புறத்தில் 16 கால் மண்டபம் உள்ளது. வலதுபுறம் அம்பாள் சந்நிதி உள்ளது. ராஜகோபுரம் மூன்று நிலைகளை உடையது. கொடிமரம் முன்னால் நந்தி உள்ளது. பிரகார முன்தூணில் இடப்பக்கம் மெய்ப்பொருள் நாயனார் சிற்பம் உள்ளது. வலப்புறம் பெரிய யானைக் கணபதி சந்நிதி உள்ளது. இங்குதான் ஔவையார் விநாயகர் அகவல் எழுதினார். கஜலெட்சுமி, நடராஜர், கபிலர் சந்நிதிகளைக்கடந்து சென்றால் தலமூர்த்தியாகிய அந்தகாசூர சம்ஹார மூர்த்தியை தரிசிக்கலாம்.

எட்டுக் கரங்களுடன் கூடிய துர்க்கை, கோஷ்ட மூர்த்தங்களைத்தரிசித்து, நாகாபரணத்துடன் மூலவர் காட்சி தருகிறார். அம்பாள் சிவானந்தவல்லி நின்ற கோலத்தில் நான்கு கரங்களுடன் காட்சி தருகிறார்.

தொடரும்...

## புதுவை ஸந்த்யாவந்தன பயிலரங்கம் 2023

சமூகத்திற்கு பல சத்கார்யங்களை செய்துவரும் வேதபாரதி பிரதி வருஷம் முகாம் நடத்தி முறையாக சந்த்யாவந்தன பயிற்சி அளித்து வருகிறது. இதன் தொடர்ச்சியாக இந்தாண்டு கடந்த மே மாதம் 19, 20, 21 ஆகிய வெள்ளி, சனி, ஞாயிறு மூன்று தினங்கள் புதுச்சேரி அமிர்தா வித்யாலயம் CBSE பள்ளியில் நடைபெற்றது.

திருநெல்வேலி, தென்காசி, பெங்களூரு, சென்னை என தமிழகத்தில் பல பகுதிகள் மற்றும் வெளி மாநிலங்களிலிருந்தும் பெரியவர்களும் சிறுவர்களும் குடும்ப சகிதமாக கலந்து கொண்டனர். 250க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டதில் பயிற்சி பெறுவதற்காக மட்டும் சுமார் நூற்றுக்கும் மேற்பட்டோர் வந்திருந்தனர்.

ரிக் வேதம், யஜுர் வேதம் - ஸமார்த்தா, வைணவ சம்ப்ரதாயம், மாத்வ சம்ப்ரதாயம், தெலுங்கு சம்ப்ரதாயம், சாம வேதம் என ஒவ்வொரு பிரிவிற்கும் தனித்தனியாக சாஸ்த்திரிகள் ஏற்பாடு செய்யப்பட்டு, ஒவ்வொரு வேளையும் சந்த்யாவந்தனத்திற்கு பிறகு மந்த்ரங்கள் பாராயணத்திற்கு "சந்தை" பயிற்சி அளிக்கப்பட்டது. பிரம்மச்சாரிகளுக்கு சமிதாதானமும், பெரியோர்களுக்கு யோகாவும் பயிற்றுவிக்கப்பட்டது.

மூன்று நாட்களும் சந்த்யாவந்தனங்களுக்கு இடையே ஸ்ரீ க்ருஷ்ண ஜெகந்நாதன் அவர்களின் சொற்பொழிவு, புதுச்சேரி சக்தி வேதபாரதி சக்திகள் கலந்து கொண்ட பட்டிமன்றம் ஆகியவை கலந்து





கொண்டவர்களின் செவிக்கு விருந்தாக அளிக்கப்பட்டது. இரண்டாம் நாள் முகாம் நிகழ்ச்சியில் சென்னை திருமயிலை, மஹாமஹோபாத்யாய ப்ரம்மஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள், ப்ரம்மஸ்ரீ மணி த்ராவிட் சாஸ்த்ரிகள் ஆகியோரின் ஆசியுரையும், மாதுஸ்ரீ பிரேமா கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகளின் பெண்களுக்கான பிரத்யேக வழிகாட்டல் உரையும் கலந்து கொண்டோருக்கு உபயோகமாக இருந்தது.

மேலும், முகாமிற்கு விஜயம் செய்திருந்த நெரூர் ஸ்ரீ வித்யா சங்கர சரஸ்வதி ஸ்வாமிகளின் அனுக்ரஹபாஷனமும் ஆசியும் அனைவருக்கும் கிடைத்தது.

கலந்து கொண்ட பெண்கள், சிறு குழந்தைகள் ஆண்கள் என அனைவருக்கும் தனித்தனியாக தங்குவதற்கான ஏற்பாடுகள், காலை முதல் இரவு வரை அனைத்து வேளைகளும் முறையான உணவு ஏற்பாடுகள் கடைசி நாளன்று வெளியூர் பிரயாணம் செய்பவர்களுக்கான வழி உணவு என அனைத்தும் புதுச்சேரி வேதபாரதி ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தது.

கலந்து கொண்டோர் அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். தமிழ்நாடு வேதபாரதியின் பொதுச் செயலாளர் ஸ்ரீ ஆர்.வெங்கட்ராமன் அவர்களின் முன்னிலையில் நடைபெற்ற இந்த முகாமின் நிறைவு விழாவில் சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் வழக்கறிஞர் ஸ்ரீ ராஜகோபால், சென்னை பிரபல ஆடிட்டர் ஸ்ரீ வி.என்.குமரகுரு, புதுச்சேரி மத்தியப் பல்கலைக் கழகத்தின் சமஸ்க்ருத துறைத் தலைவர் ஸ்ரீ கிருஷ்ணன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு நிகழ்ச்சிக்கு சிறப்பு சேர்ப்பித்தனர்.

இறைவழிபாட்டு பிரார்த்தனையுடன் நிகழ்ச்சிகள் இனிதே நிறைவுற்றது. சமுதாயமும், பிராமணர்களும் செழித்தோங்க அனைவரும் தவறாது சந்த்யாவந்தன பிரார்த்தனையை கடைபிடிக்க பிரார்த்திக்கிறோம்.

# தருமபுரி கோடி காயத்ரீ ஜப யக்ஞம் 2023

*22.04.2023, சனிக்கிழமை அன்று வேதபாரதி அமைப்பின் சார்பில் தருமபுரியில் காயத்ரீ ஜப ஹோமம் காலை 6.30 மணி முதல் 10.30 மணி வரை நடைபெற்றது.*

*வேலூர் ப்ரம்மஸ்ரீ கணேச வாத்தியார் தலைமையில் நான்கு ஹோம குண்டங்கள் அமைக்கப்பட்டு சுமார் 50 பேர் கலந்து கொண்டு காயத்ரீ ஹோமம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.*

*இந்நிகழ்ச்சியில் ஸ்ரீ க்ருஷ்ண ஜகந்நாதன்ஜி கலந்து கொண்டு சிறப்பித்தார்.தருமபுரியில் உள்ள சத்சங்க உறுப்பினர்கள் பிரதிமாதம் ஞாயிற்றுக்கிழமை ஸஹஸ்ர காயத்ரி சமஷ்டியாக ஜபம் செய்வது என்று முடிவு செய்யப்பட்டது.*

*தருமபுரி வேதபாரதி பொறுப்பாளர்கள் ஸ்ரீ சந்திரமௌலி, ஸ்ரீ ஸ்ரீனிவாசன், ஸ்ரீஹரி முன்னின்று விழாவை சிறப்புற நடத்தினார்கள்.*

*சென்னையிலிருந்து வேதபாரதி செயலாளர் திரு.வெங்கட்ராமன் கலந்து கொண்டார்.*



# கோவிந்தபுரம் – வேத கருத்தரங்கம் & கோடி காயத்ரீ ஜப யக்ஞம் 2023

*ஏப்ரல் 29, 30 மற்றும் மே 1-ந் தேதி கும்பகோணம், கோவிந்தபுரம் ஸ்ரீ விட்டல் மஹராஜ் சமஸ்தான் ஆதரவுடன் வேத கருத்தரங்கம் மற்றும் காயத்ரீ ஹோமம் சிறப்பாக நடைபெற்றது. 28-ம் தேதியே வேதபாரதியில் வேதம் பயிலும் மாணாக்கர்களும், நிர்வாகிகளும் வந்து ஏற்பாடுகள் கவனித்தார்கள். 29-ம் தேதி காலை 5.00 மணி முதலே திருச்சி ஸ்ரீ சந்திரசேகர் வழிகாட்டுதலில் காலை அனுஷ்டானம், கோ பூஜை சிறப்பாக நடைபெற்றது.*

*காலை 10.00 மணிக்கு கும்பகோணம் ஸ்ரீவத்ஸம் உரிமையாளர் திரு.சீதாராமன் அவர்கள் கலை இலக்கியம் பண்பாட்டில் சீர்மிகு அந்தணர்கள் தொண்டாற்றிய காலங்களையும் சிறப்புகளையும் குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் சொல்லி, வரும் காலங்களிலும் அந்தணச் சிறுவர்கள் தங்கள் திறமைகளை வளர்த்துக் கொண்டு தேசப்பணியும், தெய்வப் பணியும் செய்திட வேண்டும் என்று வலியுறுத்தினார்கள்.*

*காலை 10.30 மணிக்கு கும்பகோணம் ப்ரும்மஸ்ரீ தினகர சர்மா அவர்களும், கோவிந்தபுரம் ஸ்ரீ விட்டல் மஹராஜ் அவர்களும் குழந்தைகளுக்கு ஆசியுரை வழங்கினார்கள். மதியம் கும்பகோணம் ஸ்ரீ கும்பேஸ்வரர் கோவில், ஸ்ரீ சங்கரமடம், திருவிடைமருதூர் ஸ்ரீ மஹாலிங்க சுவாமி கோவில் ஆகிய இடங்களில் ப்ரம்மஸ்ரீ கைலாச கனபாடிகள் தலைமையில் வேதம் பயிலும் மாணவர்கள் வேதபாராயணம் செய்தது உள்ளம் உருகச் செய்தது.*

*மறுநாள் 30-ம் தேதி காலை 8.00 மணி முதல் திருவிசநல்லூர் ஸ்ரீதர ஐயாவாள் ஸ்ரீ மடத்தில் வேதபாராயணமும் ஸ்ரீதர ஐயாவாள் மேன்மையையும்*

எடுத்துரைக்கப்பட்டது. ஸ்ரீதர ஐயாவாள் நிர்வாகத்தினர் வேத பாராயணம் செய்தவர்களுக்கு சிற்றுண்டி அளித்து கௌரவப்படுத்தினர்.

கும்பகோணம் மருதா நல்லூர் ஸ்ரீ சத்குரு ஸ்வாமிகள் மடத்திற்கு சென்று வேத பாராயணம் செய்யப்பட்டது. மாலை கோவிந்தபுரம் ஸ்ரீ போதேந்திராள் மடத்திலும் மேட்டூர் காஞ்சி மஹா ஸ்வாமிகள் தபோவனத்திலும் வேத பாராயணம் நடைபெற்றது.

மே 1ம் தேதி காலை 6.00 மணி முதலே கோடி காயத்ரீ ஜப யக்ஞத்திற்கான பூர்வாங்க பூஜைகள், ஸங்கல்பம், கட ஸ்தாபனம் ஸ்ரீ கைலாச குருஜி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

7.30 மணி முதல் 10.30 மணி வரை 20 ஹோம குண்டங்கள் அமைக்கப்பட்டு 150 க்கும் மேற்பட்ட ஸ்ரீ காயத்ரீ ஜபம் செய்தவர்கள். ஸ்ரீ காயத்ரீ ஹோமம் செய்தார்கள்.

குடந்தையில் உள்ள வேதபாடசாலை குழந்தைகள் கலந்து கொண்டு வேதபாராயணம் செய்தார்கள். ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம மண்டலி உறுப்பினர்கள் கலந்து கொண்டு ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பாராயணம் செய்தார்கள்.



கும்பகோணம் வேதபாரதி நிர்வாகி ஸ்ரீ ராமகிருஷ்ணன் குடும்பத்தினர், ஸ்ரீ குருமூர்த்தி, ஸ்ரீ மணிகண்டன், ஸ்ரீராஜாராமன் குடும்பத்தினர், வேதபாராயணத்திற்கு வந்திருந்த குடும்பத்தினர் குறைந்த நாட்களில் வெகு நேர்த்தியாக திட்டமிட்டு மிகச்சிறப்பாக செய்து முடித்தார்கள்.

சென்னையிலிருந்து வேதபாரதி செயலாளர் திரு.வெங்கட்ராமன், ஒருங்கிணைப்பாளர் ரகுநாத், ஸ்ரீ சங்கர், ஸ்ரீமதி காமாட்சி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## ஸ்ரீ சங்கர ஜெயந்தி - பெங்களூர்

கடந்த 97 ஆண்டுகளாக பூஜ்யஸ்ரீ பரமானந்த ஸ்வாமிகளின் பூர்வாஸ்ரம பந்துக்களால் நடந்து வரும் ஸ்ரீ சங்கர ஜயந்தி மஹோத்ஸவம் மே 01.05.2023 முதல் 07.05.2023 வரை. பெங்களூர் பசவனகுடி ரத்னவிலாஸ் சாலையில் அமைந்துள்ள ஸ்ரீ சங்கர குருகுலத்தில் வேதபாராயணம், ருத்ராபிஷேகம், உபன்யாசம் தொடர்ந்து நடைபெற்றது. சிறப்பு நிகழ்ச்சியாக 6 மற்றும் 7ம் தேதிகளில் ரதோத்ஸவமும் புதிய வேதபாடசாலை துவக்க விழா நிகழ்ச்சியும் நடைபெற்றது. தமிழ்நாடு ஆந்திரா மற்றும் கர்நாடகாவில் உள்ள மிகப்பெரும் வேத பண்டிதர்கள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள். பெங்களூர் ஸ்ரீ சங்கர சேவா சமிதி நிர்வாகிகள் டாக்டர் ஸ்ரீ சந்திரசேகர் ஜி அவர்கள் தலைமையில் மிக நேர்த்தியாக நிகழ்ச்சிகளை வடிவமைத்து இருந்தார்கள். சென்னையிலிருந்து டாக்டர் ப்ரும்மஸ்ரீ மணி ட்ராவிட் சாஸ்திரிகள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். சென்னையிலிருந்து வேதபாரதி ஸ்ரீ க்ருஷ்ண ஜகந்நாதன் ஜி, ஸ்ரீ வெங்கட்ராமன், ஸ்ரீ ரகுநாத், ஸ்ரீ வெங்கடராயர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ANATHA PRETHA KAINKARYA TRUST
# அநாத ப்ரேத கைங்கர்ய ட்ரஸ்ட்

Communication Address : S. SREEDHAR, 32, Ground Floor, Raja Nagar, 1st Main Road, Neelangarai, Chennai - 600 115.

Mobile : +91-9500005772, +91-9840243592, +91-9445378071

Email : dharmaa.apkt@gmail.com Website : www.dharmaa.org



## ஸ்ரீ காஞ்சி மஹா ஸ்வாமிகளின் அருளுரை தெய்வத்தின் குரல் 3ம் பாகம்
## அநாதைப் பிரேத ஸம்ஸ்காரம் இது தான் அச்வமேதம்

இதுவரை அச்வமேதத்துக்கு ஸமமான பலனைத் தருகிற ஒரு பணியைச் சொல்லவில்லை. மற்ற எல்லாவற்றையும் விட உயர்ந்ததான அந்தப் பணி என்னவென்றால், அதுதான் அநாதைப் ப்ரேத ஸம்ஸ்காரம்

**அநாத ப்ரேத ஸம்ஸ்காராத்**
**அச்வமேத பலம் லபேத்**

என்பது சாஸ்த்ர வசனம்

பர - உபகாரமாக, செத்துப் போன இன்னொரு ஜீவனுக்கு இதனால் உதவி பண்ணும் போதே, நமக்குப் பாபம் வராமல், கடமையைச் செய்து, நமக்கு உபகாரம் பண்ணிக் கொள்கிறோம்.

**இந்த அறக்கட்டளையின் நோக்கம்**

1. அநாத ப்ரேத ஸம்ஸ்காரம்
2. கர்த்தா ஏழையாக இருந்தால் அவர் செய்கின்ற தகன காரியங்களுக்கு உதவி செய்தல்.
3. நீத்தார் கடன், அந்த்யேஷ்டி இவைகளை குறித்து தர்மப்ரசாரம் செய்தல், பொது மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.
4. மருத்துவமனையில் பல மாதங்களாக கிடக்கும் ப்ரேதங்களை அரசு அல்லது நீதிமன்ற உத்தரவு பெற்று உரிய ஸம்ஸ்காரம் செய்தல்

**Contributions can be sent to :**
**A/c Name : Anatha Pretha Kainkarya Trust**
**Bank Name : Canara Bank, T.Nagar Branch**
**SB A/c No : 0917101048526 / IFSC Code : CNRB0000917**

**Cheques should be sent to the communication Address listed on top of this page. The donors are requested to send an email to dharmaa.apkt@gmail.com with full details of transfer, Address, email and contact Number.**



CUB கீ செயின் டெபிட் கார்டினை பரிந்துரைத்து ஊக்க வெகுமதியை பெறுங்கள்
₹150* வரை
எவ்வாறு செயல்படுகிறது
STEP 1
நெட்பேங்கிங் மற்றும் மொபைல் பேங்கிங் வாயிலாக கீ செயின் டெபிட் கார்ட் வேண்டி விண்ணப்பிக்கவும்
STEP 2
விண்ணப்பிக்கும் போது பரிந்துரைத்தவரின் மொபைல் எண்ணை பதிவு செய்யவும்
STEP 3
கீ செயின் டெபிட் கார்டு டெலிவரி செய்யும் பொது பரிந்துரைத்தவர் மற்றும் பரிந்துரைக்கபட்டவருக்கு ரூ.50
STEP 4
பரிந்துரைக்கபட்டவருக்கு மேலும் ரூ.50 (ஆக்டிவேஷன் செய்து முதல் பரிவர்த்தனை செய்த பின்)
CUB நெட் பேங்கிங், மொபைல் பேங்கிங் மற்றும் இணையதளம் மூலம் விண்ணப்பிக்கவும்
Scan QR Code to Apply
*T&C Apply
RuPay ON-THE-GO
If you are not an existing CUB Customer, Now you can open Savings & Current account instantly through VIDEO KYC
Simply give a missed call to +91 88866 10805 (or) Scan the QR Code
CUB TRUST AND EXCELLENCE SINCE 1904
சிட்டி யூனியன் பேங்க்
www.cityunionbank.com
ராசியான பேங்க், ஈஸியான பேங்க்
Internet/Mobile Banking | Sovereign Gold Bonds | Chat Bot | Cardless Withdrawal | Fastag | Spend Analyzer | Debit and Credit Card | Prepaid/Travel Card | PoS | Social Media Banking | UPI QR Code for Merchants | Online Mutual Fund | Video KYC Online ASBA | WhatsApp Banking Insta Loan | Wallet | Set Card Limit | Green Pin
For Assistance, call our 24x7 Customer Care : 044 7122 5000

RNI No. : TNTAM/2016/73726 REGD No. : TN/CC(S)DN/571/21-23
Date of Publication First Week of Every Month
Licenced to Post without Pre Payment - TN/PM G (CCR) / WPP 605/21-23
Posted at Patrika Chennai, Egmore.
Posted between 1 - 7th June 2023




தரமான நகைகளுக்கு
சரியான முகவரி....

சூர்யா ஜுவல்லர்ஸ் ® A/c

287,288, புளியமரச்சந்து, ஈஸ்வரன் கோவில் வீதி, திருப்பூர் - 4. போன்: 0421 2241829

78, ஈஸ்வரன் கோயில் வீதி, குலாலர் பிள்ளையார் கோயில் எதிரில், திருப்பூர். போன் : 0421 2241827

சூர்யா எலக்ட்ரிக்கல்ஸ்

7(2), புளியமரத்தோட்டம், மங்கலம் ரோடு, திருப்பூர் 4.
போன்: 0421 2241826

To

If not delivered please return to
**VEDABHARATHI**
No.31, Seshadripuram 1st Main Road, Baby Nagar, Velachery, Chennai-42.